For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• செப்டம்பர் 2025 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் • விலை : ரூ 60 • இதழ் 64

www.christianhistoricalsociety.in

பெஞ்சமின் ஷுல்ஸ்

அனி கேமரர்

இசபெல்லா வியாட்

www.christianhistoricalsociety.in

பதிப்பாசிரியர்

கிறிஸ்தவ **வரலாற்றுச் சுவடுகள்**

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்களுக்கு வணக்கம்.

'பூர்வ நாட்களில் செய்த கிரியைகளை எங்கள் பிதாக்கள் சொல்லக் கேட்டோம்'.' (சங். 44:1)

'ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிடில் அது எனக்கு எப்படித் தெரியும்?' (அப். 8:31)

'திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்' என்ற நம் இதழின் முகப்பு வாசகம், இந்த மாத இதழின் நோக்கத்தை அழகாக விளக்குகிறது. வேத வசனம் சொல்வது போல, நம் முன்னோர்களின் பாதச்சுவடுகளைப் பின்தொடர்வது, நிகழ்காலத்தில் நாம் திடமாக நடக்கவும், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளவும் உதவுகிறது. இந்த இதழ், அத்தகைய பலரின் தியாகச் சுவடுகளை உங்கள் முன் வைக்கிறது.

சீகன்பால்க் தமிழ் கற்பதற்கு உதவிய இந்து ஆசானான 'கனபடி வாத்தியார்' போன்ற பெரிதும் அறியப்படாத மாமனிதர்களின் மறைக்கப்பட்ட பங்களிப்புகளை இந்த இதழில் வெளிக்கொணர்கிறோம். ஒரு சிறிய உதவி, எவ்வளவு பெரிய மாற்றத்திற்கு வித்திட்டது என்பதை இது காட்டுகிறது. அதன்பின், விவிலிய மொழிபெயர்ப்பை நிறைவு செய்த பெஞ்சமின் ஷுல்ஸ் போன்றோரின் அயராத உழைப்பையும் காண்கிறோம்.

அதே சமயம், 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு' என்று கேட்ட காலத்தில், பெண்களின் கல்விக்காகத் தன்னை அர்ப்பணித்த அனி கேமரர் மற்றும் சமூகப் பணியாற்றிய இசபெல்லா வியாட் போன்ற மிஷனரிப் பெண்களின் தியாகம் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அவர்களின் சேவை, இன்று லட்சக்கணக்கான பெண்கள் கல்வி அறிவு பெற அடித்தளமிட்டது.

வரலாறு என்பது வெளிநாட்டு மிஷனரிகளைப் பற்றியது மட்டுமல்ல. நூறாண்டுகள் வாழ்ந்து, நம் மண்ணில் இறைப்பணிக்குச் சாட்சியாய் விளங்கிய அருள்திரு. S. T. பால் ஞானையா அவர்களின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். மேலும், ஒரு சிறிய கிராமமான 'மகிழ்ச்சிபுரம்' திருச்சபை உருவான உணர்வுப்பூர்வமான வரலாறும், திருநெல்வேலியில் திருச்சபை சந்தித்த சவால்களும் நம் விசுவாசத்தை உறுதிப்படுத்துகின்றன.

இந்தக் கட்டுரைகள் வெறும் கடந்த காலக் கதைகள் அல்ல; அவை நம்முடைய விசுவாசப் பயணத்திற்கு வழிகாட்டும் ஒளிவிளக்குகள். இந்த வரலாற்று நாயகர்களின் தியாகமும், அர்ப்பணிப்பும், அவர்கள் சந்தித்த சவால்களும் இன்று நமக்குப் பாடமாகவும், உத்வேகமாகவும் அமையட்டும்.

இந்த வரலாற்றுப் பணியைத் தொடர்ந்து செய்வதற்கு உங்கள் பங்களிப்பு மிகவும் அவசியம். இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவு ஆவதால், சந்தாவைப் புதுப்பிக்காதவர்கள் அதைச் செய்யும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறோம். மேலும், சந்தாவுக்கு மேலாகக் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ அளித்து இப்பணியை ஆதரிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நமது கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தின் கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்காகத் தொடர்ந்து உங்கள் ஜெபங்களாலும் ஆதரவாலும் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பதிப்பாசிரியர்,

Manna Selvakkumar

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத இதழ் 64 | செப்டம்பர் 2025

ஆசிரியர்: மன்னா செல்வகுமார்

வடிவமைப்பு: சுஜித் ரெக்ஸ்

வெளியீடு: கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,

கதவு எண்: 2-2-8(4), வடக்குத்தெரு,

பங்களாச் சுரண்டை - 627859,

தென்காசி மாவட்டம், தமிழ்நாடு.

தொலைபேசி: 04633 290401, 91767 80001

மின்னஞ்சல்: christianhistorical@gmail.com

இணையதளம்: www.christianhistoricalsociety.in

UPI ID: mannaselvakumar@okicici

G Pay

CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

சந்தா விபரம்	உள்நாடு
தனிப்பிரதி	₹ 60 + நன்கொடை
ஆண்டு சந்தா	₹ 600 + நன்கொடை
ஐந்து ஆண்டு சந்தா	₹ 3000 + நன்கொடை

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு. தனிப்பட்ட சுழற்சிக்கு மட்டும். சந்தா விபரங்கள் மற்றும் நன்கொடை அளிக்கும் முறைகள் கடைசிப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பெண்களின் கல்வி

அனி கேமரர்

I D ஜெபராஜ்

அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு? 19-ம் நூற்றாண்டில் பெண்களின் கல்வி குறித்து கேட்போருக்குச் சொல்லப்படும் பதில் இது தான். பெண்கள் தங்கள் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்ள மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். கல்வி என்பது பெண் குழந்தைகளுக்கு மறுக்கப்பட ஒன்றாகவே இருந்து வந்தது. மேலும் பொட்டுக் கட்டி விடுதல், குழந்தைத் திருமணம், சதி போன்ற சமூகக் கொடுமைகளால் மிகவும் பாதிக்கப்பட்டனர். கல்வி அறிவு பெருகும்போது தான் சமூகத் தீமைகளை வென்றெடுக்க முடியும் என்று தீர்க்கமாய் நம்பின மிஷனெரிமார்கள் கல்வியை ஆயுதமாக்கினர். ஆயினும், சமூகத்தில் புரையோடிக் கிடந்த சில சமூக சிக்கல்களால் கல்வியைப் பெண் குழந்தைகளிடம் கொண்டு சேர்ப்பது மிகவும் கடினமான காரியமாயிருந்தது. இன்று பெண்களின் கல்வி விகிதாச்சாரம் என்பது சராசரியாக 80% என்பதைத் தாண்டிக் காணப்படுகிறது. இந்த நிலையை எட்டுவதற்கு பாடுபட்ட பல்வேறு மிஷனெரிமார்களை நாம் அறிவோம். அதில் முதன்மையானவர் திருமதி. அனி கேமரர் அம்மையார்.

தென் திருவிதாங்கூர் மிஷனின் தந்தை எனக் கருதப்படுபவர் லண்டன் மிஷன் சங்கத்தின் மிஷனெரி கனம் சார்லஸ் மீட் ஐயரவர்கள். அவருக்கும் ஜோஹன்னா செலெஸ்டினா அம்மாளுக்கும் மகளாக 1821-ம் ஆண்டு பிறந்தவர் அனி அம்மையார். அனி அம்மையாரை குறித்து அறிந்துகொள்ளும் முன், அவரது தந்தை சார்லஸ் மீட் குறித்து அறிந்து கொள்வது அவசியம். தென் திருவிதாங்கூர் அப்போஸ்தலன் என்று அழைக்கப்படும் சார்லஸ் மீட் ஐயர் அவர்கள் 1792-ஆம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தைச் சார்ந்த கிளொஸ்டர் மாகாணத்தில் உள்ள பிரிஸ்டல் பட்டணத்தில் பிறந்தார். அதிக கடவுள் பக்தி கொண்ட அவருடைய பெற்றோர் அவரை தெய்வ பக்தியில் வளர்த்து அவரை மிஷனெரி ஊழியத்திற்கு ஆயத்தம் செய்தனர். லண்டன் மிஷன் சங்கத்தார் அவருக்கு வேத சாஸ்திரக் கல்வி கற்றுக்கொடுத்து தென் திருவிதாங்கூர் பகுதிக்கு அனுப்பி வைத்தனர். மீட் ஐயரவர்கள் ஹன்ட் ஐயரின் (Rev. Hurnt) மகளை விவாகம் செய்தார். 1816-ம் ஆண்டு சென்னை வந்து சேர்ந்தார். அங்கிருந்து திருவிதாங்கூருக்குப் புறப்பட்டு வரும் வழியில் அவருடைய மனைவி வியாதிப்பட்டு மரித்துப்போனார்கள். 1817-ம் ஆண்டு மைலாடி வந்து சேர்ந்தார். பின்னர் மிஷன் தலைமையிடம் நாகர்கோவிலுக்கு மாற்றப்பட்டதால் நாகர்கோவில் வந்து சேர்ந்து தன் மிஷனெரிப் பணியைத் தொடர்ந்தார். 1818-ம் ஆண்டு நீதிபதியாக நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் நீதிபதியாக செயல்படுவதை சங்கத்தார் விரும்பாததால் ஒரு வருட காலத்திற்குள் நீதிபதி பொறுப்பைத் துறந்தார். இந்நிலையில் தஞ்சாவூரில் பணி செய்து வந்த ஹோர்ஸ்ட் ஐயரின் மகள் ஜோகன்னா செலோஸ்டினா (Johanna Coelestina) என்ற அம்மையாரை விவாகம் செய்தார். திருவிதாங்கூர் மிஷன் பணித்தளத்தின் முதல் பெண் மிஷனெரி இவரே. 1820-ம் ஆண்டில் முதல் திருவிதாங்கூர் அச்சகத்தை ஏற்படுத்தினார். 1821-ம் ஆண்டு மைலாடியில் இருந்து

நாகர்கோவிலுக்கு மாற்றப்பட்ட ஆரம்பப்பள்ளியை நடத்தவும் பெண்களுக்கென உண்டுஉறைவிட (போர்டிங்) பள்ளி ஒன்றை அமைக்கவும் முயற்சிகள் மேற்கொண்டார். 1828-ஆம் ஆண்டு நாகர்கோவிலில் இருந்து நெய்யூருக்கு மாற்றப்பட்டார். அக்காலத்தில் தென் திருவிதாங்கூர் பகுதியில் கிறிஸ்தவர்கள் மிகவும் நெருக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இந்நிலையில் 1845-ம் ஆண்டு அவரது மனைவியும், அனி அம்மையாரின் தாயாருமாகிய செலோஸ்டினா மரித்துப்போனார்கள். எனினும் இடைவிடாது தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றி வந்தார். இந்நிலையில் லாயிஸ் பிடால்ப் என்ற ஒரு இந்தியப் பெண்ணை திருமணம் செய்தார். ஒரு இந்திய பெண்ணை திருமணம் செய்ததை சங்கத்தார் ஏற்றுக்கொள்ளாததால் 1852-ம் ஆண்டு சங்கத்திலிருந்து விலகி, அங்குள்ள அரசாங்க அச்சுக்கூட மேலதிகாரியாகவும் ஆங்கில பள்ளிக்கூட இன்ஸ்பெக்டராகவும் பணி செய்தார். தனது 80-வது வயதில் மறுமைக்குட்பட்டார். மீட் ஐயரவர்கள் பெண்களுக்கு கல்வி கொடுக்க வேண்டும் என்று அதிக கரிசனை உடையவராக காணப்பட்டார். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட குடும்பங்களில் உள்ள பெண் பிள்ளைகளுக்கு கல்வி கற்றுக் கொடுத்து, அவர்களை ஆசிரியைகளாக்கி அவர்களைக் கொண்டு சிறு பிள்ளைகளுக்கு கல்வி கற்றுக் கொடுத்தார். தென் தமிழகத்தில் பெண் கல்விக்கு அடித்தளம் அமைத்தவர் கனம் சார்லஸ் மீட் ஐயர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

தன் இளமைக் காலத்தில் தன் தந்தையுடன் வளர்ந்த அனி அம்மையார் அவர்கள், தன் தந்தையின் ஊழியத்தையும் தியாகத்தையும் கண்டு தன்னையும் ஒரு மிஷனெரியாக தயார்படுத்திக் கொண்டார். 20 வயதில் நாசரேத் பகுதியில் பணி செய்து வந்த S.P.G. மிஷனெரி கனம் அகஸ்டஸ் பிரெட்ரிக் கேமரர் (A.F. கேமரர்) ஐயரவர்களை திருமணம் செய்து கொண்டார். திருமணமாகி நாசரேத் பணித்தளத்திற்கு வந்த நாள்முதலாய், எப்படியாகிலும் இங்குள்ள பெண் குழந்தைகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு செயல்படத் தொடங்கினார். அதின்படி 1842-ம் வருஷத்தில் நாசரேத்தில் பெண்கள் பாடசாலை ஒன்றை நிறுவத் தீர்மானித்து, கனம் கேமரர் ஐயரும் அம்மாளும் வீடு வீடாய்ச் சென்று பெற்றோரை நேரில் பார்த்து, பெண்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி, அவர்களின் பெண்பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று அழைத்தனர். முதலில் தயங்கியவர்கள் பின்னர் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப ஆரம்பித்தனர். . எனவே 1843-ம் வருஷம் இறுதிக்குள் பெண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அனி கேமரர் அம்மையார் அவர்களே இப்பாடசாலையின் ஆசிரியையானார்கள். துவக்கத்தில் இவர்களுக்கு அக்குழந்தைகளுக்குக் கற்பிப்பது . .மிகவும் கஷ்டமான காரியமாயிருந்தது. இந்நிலையில் பெண் கல்வியின் மேன்மையை உணராத பலர் “இப்பெண்களுக்குப் படிப்பு வருமா? இதைவிடப் பசுக்களுக்குக் கல்வி புகட்டலாமே” என்று ஏளனம் செய்தனராம். குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வருவதிலும், படிப்பதிலும் மிகுந்த ஒழுங்கீனமும் மந்தமாய்க் காணப்பட்டனர். மற்றவர்களின் வார்த்தையும், பிள்ளைகளின் செயல்பாடுகளும் கேமரர் அம்மையாருக்குப் பல நேரங்களில் சோர்வு உண்டாக்கிற்று. எனினும் அவர்களுடைய தகப்பனாரிடம் கற்றுக்கொண்ட ஊழியம் அவருக்குக் கைகொடுத்தது. கிறிஸ்துவுக்குள் தன்னை திடப்படுத்திக் கொண்டார். பல்வேறு திட்டங்கள் தீட்டி, பிள்ளைகளுக்குத் துணியும், சில சமயங்களில் பணமும்கூடக் கொடுத்து பள்ளிக்கூடத்துக்கு அழைத்து வருவார்கள். நாளடைவில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஒழுங்காக பள்ளிக்கு அனுப்ப ஆரம்பித்தனர். பிள்ளைகளும் உற்சாகமாகப் படிக்க ஆரம்பித்தார்கள். 1846-ம் ஆண்டு ஆலயத்துக்கு முன்னால் ஒரு சிறு கட்டடம் கட்டி, அதில் பெண்கள் பள்ளிக்கூடத்தை நிலைப்படுத்தினார்கள். அந்த வருட ரிப்போர்ட்டில் ‘பெண்கள் கல்வி வெகு உற்சாகமாய் நடைபெறுகிறது. அதன் காரணமாக நாசரேத் மிஷனுக்கு ரூ. 100 கடன் ஏற்பட்டிருக்கிறது” என்று எழுதினார்கள். இப்பள்ளியே இன்று தூய யோவான் மேல்நிலைப்பள்ளியாக உயர்ந்திருக்கிறது.

அக்காலத்தில் திருநெல்வேலி நாட்டில் மூக்குப்பீறியில் தான் பெரிய கிறிஸ்தவ சபை இருந்தது. ஞானஸ்நானம் பெறாதவர்களோடு சேர்ந்து சுமார் 1000 பேர் சபையில் அங்கத்தினராயிருந்தனர். இப்பெரிய சபைக்குப் பெண்கள் பாடசாலை மிகுந்த அவசியமாக கருதப்பட்டது. எனவே மூக்குப்பீறியிலும் 1848 ஆம் ஆண்டு ஒரு பெண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1849 ஜூன் மாதக் கணக்கின்படி, இப்பள்ளிக்கூடத்தில் 121 கிறிஸ்தவப் பெண்கள் கல்வி கற்றார்கள்.

அனி கேமரர் அம்மையார் அயராத முயற்சியால் நாசரேத் பெண்கள் பாடசாலைக்கு ஒரு போர்டிங் அமைத்தது. இப்போர்டிங் 1848 கடைசியில் அல்லது 1849-க்கு முன்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம். 1849 ஜூன் கணக்கின்படி போர்டிங் பெண்களின் தொகை 68 ஆகும். ஆனால் அம்மையாரின் மரணத்திற்குப் பின் இப்போர்டிங் குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை.

இவ்விதமாக தன் தந்தையிடம் கற்ற தெய்வபக்தி, ஊழியதாகம் மூலமாய் பெண்கள் பாடசாலைக்காக மிக உற்சாகமாய்த் தங்கள் முழுசக்தியையும் பிரயோகித்து ஊழியம் செய்த அனி அம்மையார் அவர்கள் 1849 செப்டம்பர் 15-ல் தம் 28-ம் வயதில் திடீரென்று மறுமைக்குட்பட்டார்கள்.

கல்வி என்பது அகத்தில் உள்ள இருளை அகற்றி, அறிவு என்னும் ஒளியை ஏற்ற பயன்படுத்தப்படும் ஒரு ஆயுதம். இந்திய நாட்டில் பெண்கள் கல்வியறிவு பெறுவதற்கு தடையாய்க் காணப்பட்ட சமூகத் தீமைகளோடு போராடி, பெண் கல்வியில் புரட்சி செய்தது கனம் சார்லஸ் மீட் ஐயரின் குடும்பம். அவரிடம் கற்ற ஊழிய அனுபவத்தை வீணாக்காமல் தன் கணவருடன் இணைந்து பல்வேறு அவதூறுகளுக்கு மத்தியில் இந்திய பெண்களுக்கு அறிவொளி வீசியவர் கனம் அனி கேமரர் அம்மையார் அவர்கள். அவர்கள் நாசரேத் பகுதியில் வாழ்ந்த நாட்கள் கொஞ்சமாய் இருந்தாலும் அவர்கள் மூலமாய் ஏற்றப்பட்ட விளக்கு இன்னும் அணையாமல் கொழுந்து விட்டு எரிந்துகொண்டு இருக்கிறது. அதை அணையாமல் காப்பது நமது பொறுப்பு.

ஒரு நூற்றாண்டின் சாட்சிய வாழ்வு:

அருள்திரு. S. T. பால் ஞானையா (1911–2011)

மன்னா செல்வகுமார்

திருநெல்வேலி திருமண்டலத்தின் ஆன்மிக வரலாற்றில், நூறு ஆண்டுகள் வாழ்ந்து, இறைப்பணியிலும் சமூகத்திலும் அழியாத தடம் பதித்த ஆளுமைகளில் அருள்திரு. S. T. பால் ஞானையா அவர்கள் முக்கியமானவர். அவரது வாழ்வு, விசுவாசத்தின் வலிமைக்கும், தளராத உழைப்பிற்கும், அசராத நேர்மைக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. அவரது நூறாவது பிறந்தநாள் நினைவாக வெளியிடப்பட்ட 'To God be the Glory' என்ற நினைவு மலரில் இடம்பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது. குடும்ப உறுப்பினர்களுக்கு என் அன்பும் நன்றியும்.

இளமையும் இறை அழைப்பும்

மே 31, 1911 அன்று, வைராக்கியமான இந்து சமயப் பின்னணியைக் கொண்ட குடும்பத்தில், திரு. சுடலைமுத்து நாடார் மற்றும் திருமதி. முத்துப்பிள்ளை அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். திருச்செந்தூர் முருகன் அருளால் பிறந்ததாகக் கருதிய பெற்றோர், அவருக்கு 'தங்கவேல்' எனப் பெயரிட்டனர். வறுமையான சூழலிலும், ஒழுக்கத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கிய ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்தில் அவர் வளர்ந்தார்.

தூத்துக்குடி கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் பயின்றுகொண்டிருந்தபோது, தனது 15-வது வயதில், குடும்பத்தின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இதற்காக, தன் தந்தையால் ஆலயத்திலேயே தாக்கப்பட்டபோதும், தன் விசுவாசத்தில் அவர் உறுதியாக நின்றார். 1926-ஆம் ஆண்டு, ஏரல் சி.எம்.எஸ். ஆலயத்தில் அருள்திரு. D.S. டேவிட் அவர்களால் ஞானஸ்நானம் பெற்றார். திரு. S.Y. ஜோசப் அவர்கள் ஞானத் தந்தையாக இருந்து அவருக்கு 'பால் ஞானையா' என்ற திருப்பெயரைச் சூட்டி, அவரை ஆவிக்குரிய வாழ்வில் வழிநடத்தினார்.

பணிவாழ்வும் குடும்பமும்

இளமையிலேயே இலங்கைக்குச் சென்று தேயிலைத் தோட்டத்தில் குமாஸ்தாவாகப் பணியாற்றிய அவர், பெற்றோரைக் கவனிக்கும் பொருட்டு தாயகம் திரும்பினார். பின்னர், ஆசிரியர் பயிற்சி பெற்று, பண்ணைவிளை போன்ற ஊர்களில் ஆசிரியராகப் பணியாற்றினார். செப்டம்பர் 6, 1938 அன்று, கிரேஸ் கனகம்மாள் அவர்களைத் திருமணம் செய்தார். ஒரு மகன் மற்றும் ஐந்து மகள்களுடன் அவரது குடும்ப வாழ்வு சிறந்தது. தன் மனைவி, குடும்பத்தை தெய்வ பயத்துடன் வழிநடத்தியதாக அவர் நன்றியுடன் குறிப்பிடுகிறார். 'ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்பார்கள்; ஆனால் ஆண்டவனை நம்பியதால், ஆண்டியாக இருந்த நான் அரசனாக உயர்ந்தேன்,' என்று அவர் அடிக்கடி நகைச்சுவையுடன் குறிப்பிடுவதுண்டு.

குருத்துவப் பணியும் தலைமைத்துவமும்

இறைவனின் அழைப்பை உணர்ந்து, திருமறையூர் மற்றும் செராம்பூர் இறையியல் கல்லூரிகளில் பயின்று, B.D. பட்டம் பெற்றார். குறிப்பாக, கிரேக்க மொழியில் 93%

மதிப்பெண்கள் பெற்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். 1944-ஆம் ஆண்டு, பேராயர் ஸ்டீபன் நீல் அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தொடர்ந்து, இராமநாதபுரம், நாசரேத், கடையனோடை, தூத்துக்குடி, பாளையங்கோட்டை எனப் பல சேகரங்களில் தனது முத்திரையைப் பதித்தார்.

அவரது பணியின் உச்சமாக, இந்திய மிஷனரி சங்கத்தின் (IMS) பொதுச் செயலாளராகப் பத்தாண்டு காலம் (1956-1966) பணியாற்றியது அமைந்தது. இக்காலத்தில், ஆந்திராவின் தோர்ணக்கல்லில் மட்டுமே செயல்பட்டு வந்த ஊழியத்தை, வட மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தி சங்கத்திற்குப் புத்துயிரூட்டினார். தனது 65-வது வயதில், 1976-ஆம் ஆண்டு பாளையங்கோட்டை சேகர குரு மற்றும் கவுன்சில் தலைவர் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றார்.

பேராயர் ஆணையாளர் மற்றும் பேராயர் கேரட்டுடனான உறவு

அருள்திரு. S. T. பால் ஞானையா அவர்கள், திருநெல்வேலி மறைமாவட்டத்தின் பல்வேறு பொறுப்புகளை

வகித்துள்ளார். அதில் மிகவும் முக்கியமான ஒன்று, பேராயர் ஆணையாளர் பொறுப்பு. இப்பொறுப்பின் கீழ், மறைமாவட்டத்தின் நிர்வாகம் மற்றும் முக்கிய முடிவுகள் எடுக்கும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது.

பேராயர் ஆணையாளராக இருந்த காலத்தில், பேராயர் கேரட் அவர்களுடனான அவரது உறவு மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. பொதுவாக, பேராயர் ஆணையாளர்கள் பேராயரின் நிர்வாகத்திற்கு உதவுபவர்களாகவும், சில நேரங்களில் பேராயரின் பிரதிநிதிகளாகவும் செயல்படுவார்கள். பால் ஞானையா அவர்கள், பேராயர் கேரட்டின் நிர்வாகத்தில் உறுதுணையாகவும், அதே சமயம், கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றி, மக்களுக்கு நல்வழி காட்டிய ஒருவராக விளங்கினார்.

ஓய்வுக்குப் பின்னும் ஓயாத ஊழியம்

ஓய்வு என்பது அவரது ஊழியத்திற்கு ஒரு முற்றுப்புள்ளியாக அமையவில்லை. மாறாக, அது ஒரு புதிய தொடக்கமாகவே இருந்தது. உலகப் புகழ்பெற்ற சுவிசேஷகர் டாக்டர். பில்லி கிரஹாம் குழுவின் இந்திய ஒருங்கிணைப்பாளராக, டாக்டர். அக்பர் ஹக் அவர்களுடன் இணைந்து சுமார் 23 ஆண்டுகள் பணியாற்றினார். இந்தியா முழுவதும் பயணம் செய்து பல்லாயிரக்கணக்கான ஆன்மாக்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தினார். சுவிட்சர்லாந்து, ஹாலந்து போன்ற நாடுகளுக்கும் ஊழியப் பயணம் மேற்கொண்டது அவரது உலகளாவிய பார்வைக்குச் சான்றாகும்.

பண்பு நலன்களும் அழியாத் தடங்களும்

அருள்திரு. பால் ஞானையா அவர்கள், நேர்மை, கண்டிப்பு மற்றும் நேரம் தவறாமைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். ஆடம்பரமற்ற எளிய வாழ்வை இறுதிவரை கடைப்பிடித்தார். ஓய்வு பெற்ற பிறகும், ஒரு சபையில் செய்தி கொடுக்க விரும்பியபோது, அந்த சபையின் இளம் வயது குருவுக்குத் தாழ்மையுடன் கடிதம் எழுதி அனுமதி கேட்ட அவரது பண்பு, அனைவரையும் நெகிழச் செய்தது. தன் குடும்பத்தினர் மற்றும் சகோதரர்கள் மீது அளவற்ற பாசம் கொண்டிருந்தார். தனது 98-வது வயதில், நீரிழிவு நோயின் காரணமாக அவரது இடது கால் அகற்றப்பட்டபோதுகூட, மருத்துவரிடம், 'எனக்கு எது நல்லதோ அதை நீங்கள் செய்தீர்கள்; ஆனால் பரலோகத்தில் உள்ள என் பிதா எனக்கு எது சிறந்தது என்பதை அறிவார்,' என்று கூறி, தளராத விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

முடிவுரை

ஒரு நூற்றாண்டின் உயிருடன் சாட்சியாக வாழ்ந்த அருள்திரு. S. T. பால் ஞானையா அவர்களின் வாழ்க்கை, விசுவாசத்தின் வழியாக எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம். அவரது தாழ்மை, நேர்மை, அர்ப்பணிப்பு மற்றும் குடும்ப அன்பு ஆகியவை இன்றைய தலைமுறைக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது. 'தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக ஸ்தோத்திரம்' (2 கொரிந்தியர் 9:15) என்ற வேத வார்த்தையின்படி வாழ்ந்து மறைந்த அவரது நினைவும் தாக்கமும் என்றும் நிலைத்திருக்கும்.

ஒரு மிஷனரி மகளின் வாழ்வும் பணியும்: திருமதி இசபெல்லா வியாட்

(நினைவுக் குறிப்பு நூலின் அடிப்படையில் ஒரு ஆய்வு)

மன்னா செல்வகுமார்

19-ஆம் மற்றும் 20-ஆம் நூற்றாண்டின் தென்னிந்தியாவின் சமய, சமூக மற்றும் கல்வித் தளங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த ஐரோப்பியப் பெண்மணிகளில் திருமதி இசபெல்லா வியாட் (Mrs. Isabella Wyatt) முக்கியமானவர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தின் தந்தை என்று போற்றப்படும் பேராயர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல்லின் மூத்த மகளான இவரது வாழ்க்கை, ஒரு தனிப்பட்ட பெண்ணின் கதையாக மட்டுமல்லாமல், அந்தக் காலத்தின் சமூக மாற்றங்களையும், கலாச்சார ஊடாட்டங்களையும் புரிந்துகொள்ள உதவும் ஆவணமாகத் திகழ்கிறது.

இளமைக் காலமும் கல்வியும்

இசபெல்லா, 1847-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் தேதி, தென்னிந்தியாவின் பாளையங்கோட்டையில், வணக்கத்திற்குரிய இராபர்ட் கால்டுவெல் மற்றும் எலிசா மால்ட் தம்பதியரின் மூத்த மகளாகப் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் 'எலிசா இசபெல்லா' என்றாலும், பிற்காலத்தில் தனது அத்தையின் பெயரான 'இசபெல்லா' என்றே அழைக்கப்பட்டார்.

அவரது தந்தை ஸ்காட்லாந்து வம்சாவளியையும், தாய் ஒரு மிஷனரியின் மகளாக திருவிதாங்கூர் பின்னணியையும் கொண்டிருந்தனர். சிறு வயதிலேயே தமிழ் பேசும் செவிலித்தாயால் வளர்க்கப்பட்டதால், இசபெல்லா ஆங்கிலத்திற்கு நிகராகத் தமிழிலும் சரளமாகப் பேசும் ஆற்றலைப் பெற்றிருந்தார். இது பிற்காலத்தில் அவர் இந்திய மக்களுடன் மிக நெருக்கமாகப் பழகுவதற்கும், பணியாற்றுவதற்கும் அடித்தளமாக அமைந்தது. தனது ஏழாவது வயதில், 1854-ஆம் ஆண்டு பெற்றோருடன் இங்கிலாந்துக்குச் சென்ற அவர், பிரைட்டனில் உள்ள செயின்ட் மேரிஸ் ஹால் (St. Mary's Hall) என்ற பாதிரியார்களின் மகள்களுக்கான பள்ளியில் கல்வி பயின்றார். அங்கே தனது கற்பனைத் திறனாலும், புத்திசாலித்தனத்தாலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் அன்பைப் பெற்றார்.

இந்தியாவுக்குத் திரும்புதலும் திருமணமும்

தனது 16-வது வயதில், 1862-ஆம் ஆண்டு, இசபெல்லா தனது சகோதரியுடன் 'லார்ட் வார்டன்' (Lord Warden) என்ற கப்பலில் 100 நாட்கள் பயணம் செய்து, 1863 டிசம்பர் 19 அன்று சென்னையை வந்தடைந்தார். பின்னர், தன் பெற்றோருடன் இடையன்குடிக்குச் சென்றார். அங்கே தனது தந்தையின் சமய மற்றும் சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார்.

1867-ஆம் ஆண்டு, தமிழ் மொழியைக் கற்கவும், மிஷனரிப் பணியில் அனுபவம் பெறவும் இடையன்குடிக்கு வந்த ஜே. எல். வியாட் (நூலின் ஆசிரியர்) அவர்களைச் சந்தித்தார். அவர்களுக்கிடையேயான நட்பு, காதலாக மலர்ந்து, பிப்ரவரி 19, 1868-இல் திருமணத்தில் முடிந்தது. அவர்களின் திருமணம், இடையன்குடியில் உள்ள பழைய, பனை ஓலையால் வேயப்பட்ட தேவாலயத்தில், உள்ளூர் மக்களின் வாழ்த்துகளுடன் கோலாகலமாக நடைபெற்றது.

சமய மற்றும் சமூகப் பங்களிப்புகள்

இசபெல்லாவின் வாழ்க்கை என்பது மட்டும் ஒரு குடும்பத் தலைவியின் வாழ்க்கையாக அமையவில்லை. அவர் கல்வி, சமூக சீர்திருத்தம் மற்றும் சமயப் பணிகளில் ஆற்றிய பங்களிப்புகள் அளப்பரியவை.

1. கல்விப் பணி: இடையன்குடியில் தன் தாயாருடன் இணைந்து பெண்களுக்கான தங்கும் விடுதிப் பள்ளிகளை நிர்வகித்தார். பின்னர், திருச்சிராப்பள்ளியில் பணியாற்றியபோது, பெண்களுக்கென ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் தொடங்கினார். இது, தென்னிந்தியாவில் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட முதல் பயிற்சிப் பள்ளிகளில் ஒன்றாகும். மேலும், இந்துப் பெண்கள் கல்வி கற்கத் தயங்கிய காலகட்டத்தில், பல தடைகளைத் தாண்டி 400-க்கும் மேற்பட்ட சிறுமிகளைப் பள்ளிகளில் சேர்த்து, அவர்களின் கல்விக்கு வித்திட்டார்.
2. தேவாலயப் பணிகள்: இடையன்குடியில் நிதிப்பற்றாக்குறையால் பாதியில் நின்றிருந்த

புதிய கல் தேவாலயத்தின் கட்டுமானப் பணிகளை மீண்டும் தொடங்க, இசபெல்லா பெரும் முயற்சி எடுத்தார். அவர் இங்கிலாந்தில் இருந்த நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதி, £250 நிதி திரட்டினார். அவரது இடைவிடாத முயற்சியால், தேவாலயம் வெற்றிகரமாகக் கட்டி முடிக்கப்பட்டது. அதேபோல், திருச்சிராப்பள்ளியில் 'ஆல் செயின்ட்ஸ்' (All Saints) என்ற புதிய தேவாலயத்தைக் கட்டுவதிலும் முக்கியப் பங்காற்றினார்.

3. சமூக சீர்திருத்த நிகழ்வுகள்: இசபெல்லா மக்களுக்காக அதிகாரத்தை எதிர்கொள்ள அஞ்சாதவர் என்பதற்கு, ஏற்கனவே முகநூல் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் சம்பவம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இடையன்குடியில் நிலத்தை அளக்க வந்த ஒரு பிராமண வருவாய் ஆய்வாளர், லஞ்சம் பெறும் நோக்கில் விவசாயிகளின் வாழை மரங்களை வெட்ட உத்தரவிட்டார். இதனை அறிந்த இசபெல்லா, அந்த அதிகாரியை அழைத்து, 'ஒரு ஆங்கிலேயப் பெண்மணியிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதா?' என்று அவரது நடத்தையைக் கண்டித்துக் கேள்வி கேட்டார். இசபெல்லாவின் கண்ணியமான ஆனால் உறுதியான பேச்சால் நிலைகுலைந்த அந்த அதிகாரி, தன் உத்தரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் குணநலன்கள்

இசபெல்லா அனைவரையும் ஈர்க்கும் ஆளுமையும், இயல்பான நகைச்சுவை உணர்வும் கொண்டவராக விளங்கினார். தன் தந்தையின் ஸ்காட்லாந்துப் பின்னணியால், ஸ்காட்லாந்துக் கதைகளை அதன் சொந்த உச்சரிப்பில் சொல்வதில் வல்லவராக இருந்தார். இங்கிலாந்தில் வசித்தபோது, போர்க்காலத்தில் வெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டதால் வருந்தியிருந்த தாய்மார்களுக்கு, மார்கரின் (margarine) கலந்த ரொட்டியை விருந்தளித்து, அதன் பின்னரே உண்மையைச் சொல்லி அவர்களை இயல்புக்குக் கொண்டுவந்த நிகழ்வு, அவரது சமயோசித புத்திக்குச் சான்றாகும்.

அவர் ஒரு சிறந்த தாய். தன் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகள் மீது மிகுந்த பாசம் கொண்டிருந்தார். கடிதங்கள் எழுதுவதில் திறமைசாலியாகவும், அழகான கையெழுத்தைக் கொண்டவராகவும் இருந்தார். தனது வாழ்வின் பெரும் பகுதியை இந்தியாவில் கழித்தாலும், இங்கிலாந்திலும் சமூகப் பணிகளில் ஈடுபட்டு, அனைவரின் நன்மதிப்பையும் பெற்றார்.

இறுதிக் காலமும் மரணமும்

1895-இல் தன் கணவருடன் இறுதியாக இங்கிலாந்துக்குத் திரும்பிய இசபெல்லா, முதலில் கேம்பிரிட்ஜிலும், பின்னர் பிராண்டனிலும் வசித்தார். 1917-இல் அவர்கள் ஓய்வு பெற்று மீண்டும் கேம்பிரிட்ஜில் குடியேறினர். 1928-இல், தங்களின் 60-வது திருமண ஆண்டான வைர விழாவைக் கொண்டாடியபோது, இங்கிலாந்து அரசர் மற்றும் அரசியிடமிருந்து வாழ்த்துச் செய்தி பெற்றனர்.

வயது மூப்பின் காரணமாக, பிற்காலத்தில் அவரது நினைவுத்திறன் படிப்படியாகக் குறைந்தது. இந்திய வாழ்க்கை குறித்த பல நிகழ்வுகளை அவரால் நினைவு கூற முடியாவிட்டாலும், தமிழ் பாடல்கள் மற்றும் ஜெபப் புத்தகத்தின் வரிகளை அவரால் நினைவில் வைத்திருக்க முடிந்தது. தனது 86-வது வயதில், பிப்ரவரி 7, 1933 அன்று, இசபெல்லா வியாட் அமைதியாகக் காலமானார்.

முடிவுரை

திருமதி இசபெல்லா வியாட்டின் வாழ்க்கை, 19-ஆம் நூற்றாண்டின் காலனித்துவ இந்தியாவில், இருவேறு கலாச்சாரங்களுக்கு இடையே ஒரு பாலமாக வாழ்ந்த ஒரு பெண்ணின் அசாதாரணமான பயணத்தை விவரிக்கிறது. அவர் ஒரு மிஷனரியின் மகளாகவும், மனைவியாகவும் சமயப் பணியாற்றியதோடு, ஒரு கல்வியாளராகவும், சமூக வழிகாட்டியாகவும், மக்களின் துயர்துடைக்கும் துணிச்சல் மிக்க தலைவராகவும் விளங்கினார். இந்த நினைவுக் குறிப்பு நூல், அவரது பன்முக ஆளுமையையும், தென்னிந்திய மக்கள் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பையும், அவர்களின் சேவை மனப்பான்மையும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மன்னா செல்வகுமார்

தரங்கம்பாடி மிஷனின் முதல் ஆசான்: கனபடி வாத்தியாரின் (kanabadi wathiar) மறைக்கப்பட்ட பங்களிப்பு

தரங்கம்பாடி மிஷனின் வரலாற்றுப் பதிவுகள், பெரும்பாலும் அதன் ஐரோப்பிய நிறுவனர்களான சீகன்பால்க், புளூட்சோ போன்றோரின் தியாகங்களையும், சாதனைகளையுமே மையப்படுத்திப் பேசுகின்றன. அவர்களின் அசைக்க முடியாத விசுவாசமும், அயராத உழைப்பும் மறுக்க முடியாத உண்மைகள் என்றாலும், அந்த மகத்தான இயக்கத்தின் வெற்றிக்குத் திரைக்குப் பின்னால் இருந்து பங்களித்த உள்ளூர் இந்தியர்களின் பாத்திரம் பல சமயங்களில் கவனிக்கப்படாமல் போய்விடுகிறது. இந்த மறைக்கப்பட்ட வரலாற்றின் மிக முக்கியமான, அதே சமயம் முரண்பாடுகள் நிறைந்த ஒரு அத்தியாயம்தான் கனபடி வாத்தியார் மற்றும் அவரது மகனின் கதை.

தரங்கம்பாடி மிஷனின் ஒட்டுமொத்த இலக்கிய மற்றும் பிரசங்கப் பணிகளுக்கும் அடித்தளமாக அமைந்த தமிழ் மொழியறிவை, அதன் நிறுவனர் சீகன்பால்க்கிற்கு வழங்கியவர் ஒரு இந்துப் பள்ளி ஆசிரியரான கனபடி வாத்தியார் (kanabadi wathiar). சுவிசேஷத்தைப் பரப்பும் நோக்கத்துடன் வந்த ஒரு ஐரோப்பியருக்கு, இந்து சமய நம்பிக்கைகளில் உறுதியாக இருந்த ஒரு உள்ளூர் ஆசான், மொழியைக் கற்றுக்கொடுத்தார் என்பது, தரங்கம்பாடி மிஷனின் தொடக்கமே ஒரு கலாச்சாரப் பரிமாற்றத்தின் மீதுதான் கட்டப்பட்டது என்பதற்கான மிகச் சிறந்த சான்றாகும்.

இந்த ஆய்வுக் கட்டுரை, கனபடி வாத்தியாரின் (kanabadi wathiar) பங்களிப்பின் மகத்துவத்தையும், அவரது மகன் ஃபிரடெரிக் கிறிஸ்டியனின் மூலம் ஏற்பட்ட தொடர்ச்சியையும், சோகத்தையும் விரிவாக ஆராய்கிறது.

சுவிசேஷத்தின் நுழைவாயில்: ஒரு திண்ணை (இந்துப்) பள்ளி

1706ஆம் ஆண்டு, ஜூலை மாதம், பார்த்தலோமேயு சீகன்பால்க் தரங்கம்பாடியில் காலடி வைத்தபோது, அவருக்கு முன்னால் இருந்த மிகப் பெரிய தடை மொழி. உள்ளூர் மக்களின் இதயங்களைத் திறப்பதற்கான ஒரே திறவுகோல் அவர்களின் தாய்மொழியான தமிழ்தான் என்பதை அவர் விரைவிலேயே உணர்ந்துகொண்டார். அக்காலத்தில், ஐரோப்பியர்கள் மொழியைக் கற்க முறையான அமைப்புகள் ஏதும் இருக்கவில்லை. ஆனால், சீகன்பால்க் ஒரு புதுமையான மற்றும் பணிவான வழியைத் தேர்ந்தெடுத்தார்.

அவர் ஒரு தனிப்பட்ட ஆசிரியரை நியமித்துக்கொள்வதற்குப் பதிலாக, உள்ளூர் இந்துப் பிள்ளைகள் கல்வி பயின்ற ஒரு பாரம்பரியமான பள்ளிக்குச் சென்றார். அந்தப் பள்ளியை நடத்தியவர்தான் கனபடி வாத்தியார். சீகன்பால்க், ஐரோப்பாவிலிருந்து வந்த ஒரு படித்த இறையியலாளர் என்ற கர்வமின்றி, அந்தப் பள்ளியின் மற்ற மாணவர்களுடன் தானும் ஒரு மாணவராக தரையில் உட்கார்ந்து, மணலில் தமிழ் எழுத்துக்களை ஏழுதிப் பழகினார். இது, அவர் உள்ளூர் கலாச்சாரத்தின் மீது காட்டிய மரியாதையையும், மொழியைக் கற்பதில் அவர் கொண்டிருந்த தீவிரத்தையும் காட்டுகிறது.

இந்த நிகழ்வில் கனபடி வாத்தியாரின் பாத்திரம் மிகவும் முக்கியமானது. அவர் ஒரு தொழில்முறை ஆசிரியர். தனது சமய நம்பிக்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய மதத்தைப் பரப்ப வந்திருக்கும் ஒரு வெளிநாட்டவருக்கு, அவர் தனது மொழியையும், எழுத்துக்களையும் கற்றுக்கொடுத்தார். இந்த உறவு, ஒரு தொழில்முறை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. சீகன்பால்க் அவருக்குச் சம்பளம் வழங்கினார்; அவர் அதற்கு ஈடாகத் தனது அறிவைப் பகிர்ந்துகொண்டார். வரலாற்றில் கனபடி வாத்தியார் ஒருபோதும் மிஷனில் ஊழியராகச் சேரவோ, கிறிஸ்தவத்தைத் தழுவவோ இல்லை. அவர் தனது இந்து சமய நம்பிக்கைகளில் இறுதிவரை உறுதியாக இருந்தார்.

மறைமுகப் பங்களிப்பின் மகத்துவம்

கனபடி வாத்தியாரின் பங்களிப்பு, ஒரு பள்ளி ஆசிரியர் தனது மாணவருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார் என்பதோடு முடிந்துவிடவில்லை. அதன் தாக்கங்கள் மிகவும் ஆழமானவை மற்றும் தொலைநோக்குடையவை.

கலாச்சாரப் பாலம்: அவர் சீகன்பால்க்கிற்குத் தமிழ் எழுத்துக்களை மட்டும் கற்றுக்கொடுக்கவில்லை. தமிழ்

மொழியின் ஒலிப்பு முறை, அதன் நுட்பங்கள், உள்ளூர் கற்பித்தல் முறைகள் மற்றும் குழந்தைகளின் கற்றல் முறைகள் ஆகியவற்றை சீகன்பால்க் நேரடியாக அறிந்துகொள்ள அவர் ஒரு பாலமாக விளங்கினார். இது, பிற்காலத்தில் சீகன்பால்க் பள்ளிகளை நிறுவியபோது, அவருக்குப் பேருதவியாக இருந்தது.

இலக்கியப் புரட்சியின் அடித்தளம்: சீகன்பால்க்கின் மகத்தான சாதனைகளான தமிழ்-ஜெர்மன் அகராதி, தமிழ் இலக்கண நூல் மற்றும் விவிலியத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு ஆகிய அனைத்திற்கும் தொடக்கப் புள்ளியாக அமைந்தது, கனபடி வாத்தியாரின் பள்ளியில் அவர் பெற்ற அடிப்படைக் கல்விதான். அந்த அஸ்திவாரம் இல்லாமல், இந்த மாபெரும் இலக்கியப் புரட்சி சாத்தியமாகியிருக்காது.

சகிப்புத்தன்மையின் சான்று: 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இரு வேறுபட்ட கலாச்சாரங்கள் சந்திக்கும்போது, ஒரு இந்து ஆசிரியர், ஒரு கிறிஸ்தவ மிஷனரிக்கு மொழியைக் கற்றுக்கொடுப்பது என்பது, அக்காலத்தில் நிலவிய ஒருவித சகிப்புத்தன்மையையும், நடைமுறை சார்ந்த அணுகுமுறையையும் காட்டுகிறது. கனபடி வாத்தியார், சீகன்பால்க்கின் நோக்கத்தை அறிந்திருந்தும், அவரை ஒரு மாணவராக ஏற்றுக்கொண்டது, அவருடைய தொழில்முறை நேர்மைக்குச் சான்றாகும்.

ஆக, கனபடி வாத்தியார், தரங்கம்பாடி மிஷனின் முதல் ஆசான் ஆவார். அவர் நேரடியாக மிஷனுக்குப் பணியாற்றாவிட்டாலும், அவருடைய பங்களிப்பு இல்லாமல் மிஷனின் ஆரம்பகால வெற்றிகள் சாத்தியமற்றவை.

தலைமுறையின் தொடர்ச்சி மற்றும் சோகம்: மகன் ஃபிரடெரிக் கிறிஸ்டியன்

கனபடி வாத்தியாரின் தொடர்பு, அவருடைய மகனின் மூலமாக மிஷனின் வரலாற்றில் ஒரு புதிய, ஆனால் துயரம் நிறைந்த அத்தியாயத்தைத் திறந்தது. அவருடைய மகன், பிற்காலத்தில் ஃபிரடெரிக் கிறிஸ்டியன் என்று அறியப்பட்டவர், தனது தந்தையை விடவும் அறிவிலும், திறமையிலும் சிறந்து விளங்கினார். அவர் ஒரு சிறந்த கவிஞராகவும், இந்து மற்றும் முஸ்லிம் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்த ஒரு பள்ளி ஆசிரியராகவும் தரங்கம்பாடியில் நற்பெயர் பெற்றிருந்தார். டேனிஷ் அரச குடும்பத்தின் மீது அவர் இயற்றிய தமிழ் செய்யுள்கள், ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, 1706ஆம் ஆண்டிலேயே டென்மார்க்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இது, மிஷனரிகள் வருவதற்கு முன்பே, அவருடைய திறமை வெளிப்பட்டிருந்ததைக் காட்டுகிறது.

1709ஆம் ஆண்டில், அவர் கிறிஸ்தவத்தின் மீது ஆர்வம் கொண்டு, ஞானஸ்நானம் பெற விரும்பினார். இந்த முடிவு, அவருடைய குடும்பத்தில் ஒரு பெரும் புயலைக் கிளப்பியது. சீகன்பால்க்கிற்குக் கல்வி கற்பித்த கனபடி வாத்தியாரே, தனது மகனின் மனமாற்றத்தை அதிகமாக எதிர்த்தார். அவரும், மற்ற உறவினர்களும், இந்து சமூகத்தின் தலைவர்களும் ஃபிரடெரிக் கிறிஸ்டியனுக்குக் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தனர். அவர்கள் அவரை இரண்டு நாட்கள் வீட்டுச் சிறையில் அடைத்து, கிறிஸ்தவராக மாற மாட்டேன் என்று சத்தியம் செய்யும்படி வற்புறுத்தினர்.

ஆனால், ஃபிரடெரிக் கிறிஸ்டியன் தனது முடிவில் உறுதியாக இருந்தார். கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில், அக்டோபர் 16, 1709 அன்று, அவர் ஞானஸ்நானம் பெற்றார். இந்த நிகழ்வு, மிஷனுக்கு ஒரு பெரும் வெற்றியாகக் கருதப்பட்டது. ஒரு கற்றறிந்த, செல்வாக்கு மிக்க உள்ளூர் இளைஞர், சமூகத்தின் எதிர்ப்பையும் மீறி, கிறிஸ்தவத்தைத் தழுவியது, மற்றவர்களுக்கு ஒரு உந்துதலாக அமையும் என்று மிஷனரிகள் நம்பினர். ஞானஸ்நானத்திற்குப் பிறகு, அவர் மிஷன் பள்ளியில் ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார்.

இருப்பினும், அவருடைய கதை சோகத்தில் முடிந்தது. தொடர்ச்சியான சமூக அழுத்தங்களையும், சோதனைகளையும் தாங்க முடியாமல், அவர் தனது விசுவாசத்திலிருந்து வழுவி விழுந்தார். முதலில் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்குச் சென்ற அவர், பின்னர் அங்கிருந்தும் விலகி, மீண்டும் தனது பழைய சமயத்திற்கே திரும்பினார் என வரலாறு பதிவு செய்கிறது.

இந்த நிகழ்வு, ஆரம்பகால மதம் மாறியவர்கள் சந்தித்த உளவியல் மற்றும் சமூகப் போராட்டங்களின் ஆழமான சான்றாகும். ஒருபுறம், ஒரு தந்தை தனது தொழில்முறை நேர்மையால் ஒரு மிஷனுக்கு மறைமுகமாக உதவுகிறார். மறுபுறம், அதே தந்தை, தனது மகன் அதே மிஷனில் இணைவதை ஆன்மீக ரீதியாக எதிர்க்கிறார். இறுதியில், அந்த மகன், சமூகத்தின் அழுத்தத்தைத் தாங்க முடியாமல், தான் ஏற்றுக்கொண்ட புதிய பாதையைக் கைவிடுகிறார்.

முடிவுரை

கனபடி வாத்தியார் மற்றும் அவரது மகனின் வரலாறு, தரங்கம்பாடி மிஷனின் ஆரம்பகால வரலாற்றின் ஒரு நுட்பமான குறுக்குவெட்டுத் தோற்றத்தை நமக்கு அளிக்கிறது. கனபடி வாத்தியாரின் பங்களிப்பு, எந்தவொரு கலாச்சாரப் பரிமாற்றமும், உள்ளூர் மக்களின் ஈடுபாடு இல்லாமல் வெற்றி பெற முடியாது என்பதை உணர்த்துகிறது. அவர் கிறிஸ்தவத்தை ஏற்காதவராக இருக்கலாம், ஆனால் அவர் ஏற்றிவைத்த கல்விச் சுடர், சீகன்பால்க்கின் கைகளில் ஒரு மாபெரும் அறிவுசார் ஆயுதமாக மாறி, தமிழ் இலக்கிய வரலாற்றையே மாற்றியமைத்தது. அவர், தரங்கம்பாடி மிஷனின் வரலாற்றில் ஒரு மௌனமான, ஆனால் மிக முக்கியமான அத்தியாயம்.

அவருடைய மகனின் கதை, ஒரு எச்சரிக்கையின் செய்தியாக ஒலிக்கிறது. விசுவாசம் என்பது தனிப்பட்ட முடிவு மட்டுமல்ல, அது ஒரு சமூகப் போராட்டமும் கூட. ஆரம்பகால இந்தியக் கிறிஸ்தவர்கள், தங்கள் குடும்பத்தையும், சமூகத்தையும், கலாச்சாரத்தையும் துறந்து, ஒரு புதிய அடையாளத்தைத் தேடியபோது, அவர்கள் சந்தித்த தனிமையும், துன்பங்களும் அளவிட முடியாதவை. ஃபிரடெரிக் கிறிஸ்டியனின் வீழ்ச்சி, அந்தப் போராட்டத்தின் ஒரு துயரமான விளைவாகும். ஆக, கனபடி வாத்தியாரின் கதை, மிஷனின் தொடக்கத்திற்கு உதவிய ஒரு சுதேசி அறிவையும், அவருடைய மகனின் கதை, அந்தத் தொடக்கத்தின் முதல் சவால்களையும் நமக்குத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

மன்னா செல்வகுமார்

மொழிகளின் மிஷனரி:
பெஞ்சமின் ஷுல்ஸின் விரிந்த பணித்தளம்

தரங்கம்பாடி மிஷனின் முதல் தலைமுறைத் தலைவர்களான சீகன்பால்க் மற்றும் கிரண்டலரின் அடுத்தடுத்த மரணங்கள், அந்த இளம் இயக்கத்தை ஒரு பெரும் வெற்றிடத்திற்கும், நிச்சயமற்ற நிலைக்கும் தள்ளியபோது, அந்தப் பெரும் பொறுப்பைத் தனது தோள்களில் தாங்கியவர் பெஞ்சமின் ஷுல்ஸ். அவர், தனது முன்னோடிகளைப் போல ஆழமான இறையியல் அறிஞராகவோ, கவர்ச்சிகரமான தலைவராகவோ இல்லாவிட்டாலும், அவர் ஒரு அசாத்தியமான மொழியியல் திறமையும், தளராத விடாமுயற்சியும், மிஷனை புதிய எல்லைகளுக்கு விரிவுபடுத்தும் துணிவும் கொண்ட ஒரு தனித்துவமான மிஷனரியாக விளங்கினார். சீகன்பால்க் தொடங்கிவைத்த விவிலிய மொழிபெயர்ப்புப் பணியை நிறைவு செய்து, தமிழ் மொழிக்கு முழுமையான விவிலியத்தை வழங்கிய பெருமை அவரையே சாரும். மேலும், தமிழோடு நின்றுவிடாமல், தெலுங்கு, இந்துஸ்தானி எனப் பல மொழிகளில் தனது பணித்தளத்தை விரிவுபடுத்தி, தரங்கம்பாடி மிஷனை சென்னை வரை கொண்டு சென்றார்.

தலைமைப் பொறுப்பும், மொழியியல் திறமையும்

1720ஆம் ஆண்டில், கிரண்டலரின் மரணத்திற்குப் பிறகு, தரங்கம்பாடி மிஷனின் தலைமைப் பொறுப்பு, ஒப்பீட்டளவில் ஒரு புதியவரான பெஞ்சமின் ஷுல்ஸின் கைகளுக்கு வந்தது. 1689ஆம் ஆண்டில் பிராண்டன்பர்க்கில் பிறந்த ஷுல்ஸ், 1719ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் தேதிதான் இந்தியாவிற்கு (சென்னைக்கு) வந்திருந்தார். அவர் ஒரு மிகத் திறமையான மொழியியலாளர் என்பதை நிரூபிக்க அதிக காலம் எடுக்கவில்லை.

'அதே மாதத்தில் (ஏப்ரல், 1720), ஷுல்ஸ் முதல் முறையாகத் தமிழில் பிரசங்கம் செய்தார். மேலும், அவர் அதில் மிகவும் முன்னேறி, விரைவில் அவர் அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொண்டார்.' ('In that very month (April, 1720) Schultze preached in Tamil for the first time, and he made such progress that he was soon quite familiar with it.')

அவர் தலைமைப் பொறுப்பேற்ற அடுத்த மாதமே, தமிழில் பிரசங்கம் செய்யும் அளவிற்கு அவர் மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தார் என்பது, அவருடைய அசாதாரணமான கற்றல் திறனுக்குச் சான்றாகும். இந்த மொழியியல் திறமையே, அவருடைய பிற்கால சாதனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது.

வரலாற்றுச் சாதனை: விவிலிய மொழிபெயர்ப்பை நிறைவு செய்தல்

பெஞ்சமின் ஷுல்ஸின் மிக முக்கியமான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்பு, சீகன்பால்க் தொடங்கிவைத்த பழைய ஏற்பாட்டின் தமிழ் மொழிபெயர்ப்புப் பணியை நிறைவு செய்ததாகும். சீகன்பால்க், ரூத் புத்தகம் வரை மொழிபெயர்த்திருந்த நிலையில், மீதமுள்ள பெரும் பணியை ஷுல்ஸ் எடுத்துக்கொண்டது.

பணித் தொடக்கம் (1723): அவர் இந்தப் பணியை 1723ஆம் ஆண்டில் தொடங்கினார். அவர் பின்பற்றிய மொழிபெயர்ப்பு முறை மிகவும் கவனமானது மற்றும் கூட்டு முயற்சி சார்ந்தது.

'1723ஆம் ஆண்டில், ஷுல்ஸ், சீகன்பால்க்கின் விவிலிய மொழிபெயர்ப்பின் தொடர்ச்சியைத் தொடங்கினார்... அவர் எபிரேய விவிலியத்தை எடுத்து, ஒரு வசனத்தை முழுமையாக வாசிப்பார். அதை முழுமையாகப் புரிந்துகொண்ட பிறகு, அதைத் தனது தமிழ் எழுத்தரிடம் திரும்பச் சொல்வார்... ஷுல்ஸ் அந்த வசனத்தை எழுதுவதற்காகச் சொல்லுவார்... மேலும், கற்றறிந்த ஒரு பிராமணரும் உடனிருந்தார். கடினமான பகுதிகளில் அவருடைய ஆலோசனையைக் கேட்பதற்காக, ஷுல்ஸ் அவரைத் தனது சேவைக்கு அமர்த்தியிருந்தார்.' ('In the year 1723 Schultze began the continuation of Ziegenbalg's translation of the Bible... He took the Hebrew Bible and read a verse through; when he was certain that he understood it thoroughly, he repeated it to his writer in Tamil... Schultze dictated the verse for writing down... There was also a learned Brahmin present, whom he had taken into his service in order to ask his advice in difficult passages...')

நிறைவு செய்தல் (1725–1728): இந்தக் கடினமான உழைப்பின் பயனாக, அவர் 1725ஆம் ஆண்டிற்குள், பழைய ஏற்பாடு மற்றும் அப்போகிரிபா (அதிகாரப்பூர்வ பட்டியலில் சேர்க்கப்படவில்லை) உட்பட முழு மொழிபெயர்ப்பையும் முடித்தார். சங்கீத புத்தகம் 1724ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது. இறுதியாக, 1728ஆம் ஆண்டில், முழு தமிழ் விவிலியமும் அச்சிடப்பட்டது.

'...1725ஆம் ஆண்டில், அவர் அப்போகிரிபா உட்பட முழுப் பகுதியையும் முடித்திருந்தார். தாவீதின் சங்கீதங்கள் 1724ல் அச்சிடப்பட்டன. மீதமுள்ள புத்தகங்களிலும் அவர்கள் நல்ல முன்னேற்றம் கண்டதால், 1728ல் முழு விவிலியமும் தமிழில் அச்சிடப்பட்டது.' ('...in the year 1725, he had completed the whole, including the Apocrypha, The Psalms of David were printed in 1724, and they made such good progress with the remaining books that in 1728 the whole Bible was printed in Tamil.')

இந்தச் சாதனை, தமிழ் மொழியை, முழுமையான விவிலியத்தைக் கொண்ட முதல் இந்திய மொழி என்ற பெருமைக்கு உயர்த்தியது. இது, தமிழ் கிறிஸ்தவ இலக்கியத்தின் ஒரு மைல்கல் மட்டுமல்ல, தமிழ் மொழி வளர்ச்சியின் ஒரு முக்கியத் திருப்புமுனையாகும்.

விரிந்த பணித்தளம்: பிற மொழிப் பணிகளும், மிஷன் விரிவாக்கமும்

பெஞ்சமின் ஷுல்ஸின் பார்வை, தமிழோடு மட்டும் நின்றுவிடவில்லை. அவர் தென்னிந்தியாவின் பிற முக்கிய மொழிகளிலும் தனது கவனத்தைச் செலுத்தினார்.

தெலுங்கு மற்றும் இந்துஸ்தானி பணிகள்: அவர் சென்னைக்குச் சென்ற பிறகு, அங்கு தெலுங்கு ('ஜென்டு' என்றும் அழைக்கப்பட்டது) மற்றும் இந்துஸ்தானி (உருது) மொழிகளைக் கற்றுக்கொண்டார்.

'சென்னையில், தெலுங்கு கற்றுக்கொள்வது அவசியம் என்பதை அவர் விரைவில் உணர்ந்துகொண்டார்... ஒரு தெலுங்கு பிராமணரின் உதவியுடன், அவர் அந்த மொழியில் விரைவான முன்னேற்றம் கண்டு, சிறிய ஞான உபதேசத்தை மொழிபெயர்க்கத் தொடங்கினார். 1727க்கும் 1732க்கும் இடையில், அவர் முதலில் புதிய ஏற்பாட்டையும், பின்னர் முழு விவிலியத்தையும் மொழிபெயர்த்தார்... 1739ஆம் ஆண்டில், மூன்றாவது இந்திய மொழியான இந்துஸ்தானியில் அவர் தீவிரமாகப் பணியாற்றத் தொடங்கினார்.' ('He soon perceived that in Madras it would be necessary for him to learn Telugu... With the help of a Telugu Brahmin, he soon made such progress in the language, that he began to translate the short Catechism, and between the years 1727 and 1732, he had translated first the New Testament and then the whole Bible... he set earnestly to work in 1739 on the third Indian language, the Hindustani...')

சென்னை மிஷன் உருவாக்கம் (1728): ஷுல்ஸின் காலத்தில், தரங்கம்பாடி மிஷனின் பணி, அதன் புவியியல் எல்லையைத் தாண்டி விரிவடைந்தது. அவர், தரங்கம்பாடியில் நிலவிய சில கருத்து வேறுபாடுகளால், ஒரு புதிய பணித்தளத்தைத் தேடினார்.

'...அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டார், ஆனால் 14 நாட்களில் குணமடைந்து, மற்ற மிஷனரிகளின் சம்மதத்தைப் பெற்று, சென்னையில் தனது இருப்பிடத்தை அமைக்கத் தீர்மானித்தார்.' '...he was taken seriously ill, but recovered in 14 days, and determined to fix his residence in Madras, having obtained the consent of the other Missionaries...'

1728ஆம் ஆண்டில், அவர் சென்னையில் ஒரு மிஷன் கிளையை நிறுவினார். இதுவே தரங்கம்பாடி மிஷனின் முதல் அதிகாரப்பூர்வமான கிளை நிலையமாகும். இந்தச் சென்னை மிஷன், பிற்காலத்தில் ஆங்கிலேய மிஷன் சங்கங்களின் பணிகளுக்கு ஒரு முக்கிய மையமாக மாறியது. 1728 முதல் 1730க்குள், அவர் சென்னையில் 200க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு திருச்சபையை உருவாக்கினார்.

சவால்களும், கருத்து வேறுபாடுகளும்

ஷுல்ஸின் பணித்திறனும், சாதனைகளும் மகத்தானவை என்றாலும், அவருடைய காலத்தில் மிஷன் சில உள் முரண்பாடுகளையும் சந்தித்தது. அவருடைய வேகமான, தன்னிச்சையான செயல்பாட்டு முறை, மற்ற மிஷனரிகளுடன் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியது.

'ஷுல்ஸால், ஒரு இடத்தில் இருந்ததை விட மற்றொரு இடத்தில் தனது சக ஊழியர்களுடன் சிறப்பாக ஒத்துப்போக முடியவில்லை... அவர் ஆழமானவராக இருப்பதை விட, சுறுசுறுப்பும், விடாமுயற்சியும் கொண்டவராக இருந்தார். ஆனால், அறிவில் அவர் தனது சக ஊழியர்களை விட மிகவும் உயர்ந்திருந்தார். அவர்களால் அவருடைய தனித்தன்மைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால், அவர்கள் அவர் மீது அதிருப்தி கொண்டு, பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டது.' ('Schultze could not agree any better with his colleagues in one place than in another... he was rather spirited and diligent than substantial; but in mind he was far above his colleagues, who could not enter into his peculiarities and were so discontented with him that there was nothing to do but to part.')

இந்தக் கருத்து வேறுபாடுகளே, அவர் தரங்கம்பாடியை விட்டு சென்னைக்குச் செல்ல ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது. சென்னையில் அவருடன் பணியாற்றுவதற்காக அனுப்பப்பட்ட சார்டோரியஸ் (Sartorius) மற்றும் கெய்ஸ்டர் (Geister) ஆகியோருடனும் அவரால் ஒத்துப்போக முடியவில்லை. அவர்கள், 1737ஆம் ஆண்டில், கடலூரில் ஒரு புதிய மிஷனைத் தொடங்கினர்.

முடிவுரை

பெஞ்சமின் ஷுல்ஸின் 24 ஆண்டுகால இந்தியப் பணி (1719-1743), தரங்கம்பாடி மிஷனின் வரலாற்றில் ஒரு விரிவாக்க அத்தியாயமாகும். அவர், சீகன்பால்க் விட்டுச் சென்ற பணியை நிறைவு செய்த ஒரு தொடர் வீரராகவும், மிஷனை புதிய மொழிகளுக்கும், புதிய இடங்களுக்கும் கொண்டு சென்ற ஒரு முன்னோடியாகவும் திகழ்ந்தார். அவருடைய மொழியியல் சாதனைகள், குறிப்பாக முழுமையான தமிழ் விவிலியத்தை அச்சிட்டது, தென்னிந்திய கிறிஸ்தவ வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றுள்ளது. அவருடைய தனிப்பட்ட குணாதிசயங்களால் சில உள் முரண்பாடுகள் ஏற்பட்டபோதிலும், அவருடைய விடாமுயற்சியும், விசாலமான பார்வையும், தரங்கம்பாடி மிஷனை ஒரு உள்ளூர் இயக்கத்திலிருந்து, ஒரு பிராந்திய இயக்கமாக மாற்றுவதற்குப் பெரிதும் உதவின. ஷுல்ஸ், தரங்கம்பாடி மிஷனின் ஒரு சர்ச்சைக்குரிய, ஆனால் மறுக்க முடியாத ஒரு மாபெரும் மிஷனெரியாக வரலாற்றில் நிலைத்து நிற்கிறார்.

மன்னா செல்வகுமார்

மாமல்லபுரத்தின் சிற்ப அற்புதங்கள்: மிஷனரி பெஞ்சமின் ஷுல்ட்ஸின் (1728) வரலாற்றுப் பதிவுகள்

தென்னிந்தியாவின் புராட்டஸ்டன்ட் மிஷன்களின் ஆரம்பகால வரலாற்றில் புகழ்பெற்ற சிற்ப நகரமான மாமல்லபுரம் (Mahabalipuram) குறித்த ஒரு விரிவான வர்ணனையை, 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அங்கு பயணம் செய்த ஜெர்மன் மிஷனரி Benjamin Schultze என்பவரின் கடிதத்திலிருந்து மேற்கோள் காட்டி இந்தக் கட்டுரை, ஷுல்ட்ஸின் அவதானிப்புகளையும், அவர் பதிவுசெய்த உள்ளூர் கதைகளையும், இணைத்து ஒரு ஆழமான வரலாற்றுப் பார்வையை வழங்குகிறது.

பெஞ்சமின் ஷுல்ட்ஸ் மற்றும் அவரது மாமல்லபுரப் பயணம் (1728)

ஆரம்பகால ஜெர்மன் புராட்டஸ்டன்ட் மிஷனரிகளில் ஒருவரான பெஞ்சமின் ஷுல்ட்ஸ், 1728 ஆம் ஆண்டு மாமல்லபுரத்திற்கு வருகை தந்தார். அவர் தனது பயண அனுபவங்களை ஒரு கடிதத்தில் பதிவு செய்துள்ளார். அக்காலத்தில் 'இரவிபுரம்' (Ravipuram) என்று அழைக்கப்பட்ட, மாமல்லபுரத்திற்கு அருகிலுள்ள ஒரு பகுதிக்குச் சென்றதாக அவர் குறிப்பிடுகிறார்.[1] அங்கு அவர் கண்ட காட்சிகள், வெறும் சிதைந்த கற்களாக அல்லாமல், உயிரோட்டமுள்ள கதைகளைக் கொண்ட ஒரு வரலாற்றுப் பொக்கிஷமாக அவருக்குத் தோன்றின. அவர் அங்கு சென்றபோது, அந்தப் பகுதியில் பத்து குடும்பங்களைச் சேர்ந்த சுமார் இருபது ஏழை பிராமணர்கள் மட்டுமே வசித்து வந்ததாகப் பதிவு செய்துள்ளார். பிரம்மாண்டமான சிற்பங்களுக்கு மத்தியில் மிக எளிமையான ஒரு வாழ்க்கை அங்கு நிலவியது அவரை ஆச்சரியப்படுத்தியது.

ஷுல்ட்ஸ் பதிவுசெய்த சிற்பங்களும் உள்ளூர் கதைகளும்

பெஞ்சமின் ஷுல்ட்ஸ், மாமல்லபுரத்தின் சிற்பங்களைக் கண்டதுடன் நின்றுவிடாமல், அந்தச் சிற்பங்களுடன் இணைத்துப் பேசப்பட்ட உள்ளூர் கதைகளையும் மிகுந்த ஆர்வத்துடன் பதிவு செய்துள்ளார்.

1. பால் சுரந்த கற்சிற்பத் தொட்டி (The Legend of the Stone Cistern):

ஷுல்ட்ஸுக்கு உள்ளூர் பிராமணர்கள் ஒரு விசித்திரமான கதையைக் கூறியுள்ளனர். ஒரு பாறையில் செதுக்கப்பட்டிருந்த தொட்டியில், ஒரு பசு தானாகவே பாலைச் சுரந்ததாகவும், ஒரு பிராமணர் அதைத் தட்டிவிட்டதால், அந்தப் பால் உறைந்து ஒரு நீக்க முடியாத கல்லாக மாறிவிட்டதாகவும் அவர்கள் நம்பினர். இந்தக் கதை, அச்சிற்பங்களுக்கு மக்கள் அளித்த தெய்வீக முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.[1]

2. ஏழு பகோடாக்களும் கடல்கொண்ட நகரமும் (The Seven Pagodas and the Submerged City):

மாமல்லபுரத்தின் புகழ்பெற்ற 'ஏழு பகோடாக்கள்' (Seven Pagodas) குறித்த செவிவழிக் கதையை ஷுல்ட்ஸ் பதிவு செய்துள்ளார். அக்காலத்தில், கடலுக்குள் பல கோபுரங்கள் (Pagodas) தெரிவதாகவும், இந்த நகரம் அதன் 'பெரும் பாவத்தால்' (great sin) கடலால் அழித்தொழிக்கப்பட்டதாகவும் மக்கள் நம்பியதாக அவர் குறிப்பிடுகிறார். மேலும், தெளிவான நாட்களில், கடலுக்கு அடியில் மூழ்கிய நகரத்தின் எச்சங்களைக் காண முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். இந்த பதிவு, மாமல்லபுரம் கடல்கோளால் அழிந்தது என்ற தொன்மக்கதை 18 ஆம் நூற்றாண்டிலேயே வலுவாக இருந்ததை உறுதி செய்கிறது.

3. அர்ச்சுனன் தபசு (Arjuna's Penance):

மாமல்லபுரத்தின் மிக முக்கிய சிற்பமான 'அர்ச்சுனன் தபசு'வை ஷுல்ட்ஸ் விரிவாக வர்ணித்துள்ளார். அவர் அதனை 'அர்ச்சுனனின் தவம்' (Arsunen's [Arjuna's] penance) என்று சரியாக அடையாளம் கண்டு பதிவு செய்துள்ளார்.

o சிற்பத்தின் அமைப்பு: ஒரு உருவம் ஒற்றைக்காலில் நின்றுகொண்டு, கைகளை மேலே உயர்த்தி தவம் செய்யும் கோலத்தில் செதுக்கப்பட்டிருந்தது.

o தெய்வீக ஆயுதம்: தவம் செய்பவரின் கையில் ஒரு 'அற்புதமான ஆயுதம்' (miraculous weapon) இருப்பதாகவும், அது ஒரே நேரத்தில் நூறு எதிரிகளைத் தாக்கக்கூடிய சக்தி வாய்ந்தது என்றும் உள்ளூர் மக்கள் கூறியதாக அவர் குறிப்பிடுகிறார்.

o மகாபாரதத் தொடர்பு: இந்தச் சிற்பம், மகாபாரதக் கதையில் வரும் ஐந்து சகோதரர்களில் ஒருவரான அர்ச்சுனன், துரியோதனனை வெல்வதற்காக பாசுபத ஆயுதத்தைப் பெற சிவனை நோக்கித் தவம் இருந்த காட்சியே என்று அவர் பதிவு செய்துள்ளார்.

4. வெண்ணெய்ப் பாறை (The Butter Rock):

இன்று 'கிருஷ்ணரின் வெண்ணெய்ப் பந்து' என்று அழைக்கப்படும் அந்தரத்தில் நிற்கும் பிரம்மாண்டமான பாறையைப் பற்றியும் ஷுல்ட்ஸ் பதிவு செய்துள்ளார்.

o அளவுகள்: அந்தப் பாறையின் விட்டம் 20 முதல் 24 அடி வரையிலும், உயரம் 36 அடி வரையிலும் இருந்ததாக அவர் குறிப்பிடுகிறார்.

o நகர்த்த முடியாத பாறை: 'கிருஷ்ணரட்' (Krisnarad) என்ற இந்தியப் பேரரசர், அறுபது யானைகளைக் கொண்டு அந்தப் பாறையை நகர்த்த முயன்று தோற்றதாக ஒரு கதையை அவர் பதிவு செய்துள்ளார். இது அந்தப் பாறையின் பிரம்மாண்டத்தையும், அதைச் சுற்றியிருந்த மர்மத்தையும் காட்டுகிறது.[2]

வரலாற்று முக்கியத்துவம்

பெஞ்சமின் ஷுல்ட்ஸின் இந்த 1728 ஆம் ஆண்டுப் பதிவுகள் பல காரணங்களுக்காக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்:

• இது மாமல்லபுரம் குறித்த மிக ஆரம்பகால ஐரோப்பியப் பதிவுகளில் ஒன்றாகும்.

• அக்காலத்தில் இந்தச் சிற்பங்கள் எவ்வாறு மக்களால் புரிந்துகொள்ளப்பட்டன, அவற்றுடன் என்னென்ன கதைகள் இணைக்கப்பட்டிருந்தன என்பதற்கு இது ஒரு நேரடிச் சான்றாக அமைகிறது.

• இது வெறும் கலை விமர்சனம் அல்ல, மாறாக ஒரு மானுடவியல் பதிவு. உள்ளூர் மக்களின் நம்பிக்கைகள், கதைகள், மற்றும் வரலாற்றுப் பார்வையை இது ஆவணப்படுத்துகிறது.

முடிவுரை

பெஞ்சமின் ஷுல்ட்ஸின் 130 ஆண்டுகளுக்கு முந்தைய பதிவுகளை 1858 ஆம் ஆண்டின் 'சர்ச் மிஷனரி இயக்கம்', மீண்டும் வெளிக்கொணர்வதன் மூலம், மாமல்லபுரத்தின் காலத்தால் அழியாத பெருமையை எடுத்துரைக்கிறது. ஷுல்ட்ஸின் கண்கள் வழியே, நாம் காண்பது வெறும் சிற்பங்களை மட்டுமல்ல; 18 ஆம் நூற்றாண்டின் மக்களின் நம்பிக்கைகள், கதைகள் மற்றும் அவர்களின் ஆன்மிக உலகத்தையே ஆகும். இந்த வரலாற்றுப் பதிவு, மாமல்லபுரத்தின் கலை மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள உதவும் ஒரு விலைமதிப்பற்ற ஆவணமாகும்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

சந்தா விபரம்	உள்நாடு
தனிப்பிரதி	₹ 60 + நன்கொடை
ஆண்டு சந்தா	₹ 600 + நன்கொடை
ஐந்து ஆண்டு சந்தா	₹ 3000 + நன்கொடை

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
(CHRISTAVA VARALATRU SUVADUGAL)
என்ற பெயரில் எடுக்கவும்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com

ஓடிப் போனவன்-12

முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர்

விஜயராமபுரம் அன்று சூரியனின் மென்கதிர்களை உள்ளே விடாமல் மேகங்களால் மறைத்துக் கொண்டு நின்றிருந்தது. ஆனாலும் அந்த வெண்சூரியன் விடாமல் இடையிடையே மேகத்துண்டுகளை விலக்கி எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டது. அந்த அழகிய அன்பாடும் ஊர், வெளிச்சமும் மங்கலுமாய் ஒளியோடும், இருளோடும் விளையாடிக்கொண்டிருந்தது.

ஆடிக் காற்று குடிசைகளின் கூரைகளைப் பிய்க்க முடியாமல் உழன்று உழன்று அடித்தது. ஆடை அணியாத சிறுவர்கள் எதையும் கண்டு கொள்ளாமல் ஓலைக் காத்தாடிகள் செய்து, அதை ஒரு சிறு குச்சியின் முனையில் நீண்ட கூர்மையான முள்ளினால் இணைத்து, கையில் பிடித்தபடி காற்றிற்கு எதிரே ஓடிக்கொண்டிருந்தனர்.

குறி தப்பிய சேவல்கள் காற்றின் வேகத்தில் பெட்டைகளின் பின்னால் தாவியடித்து ஓடின. மரங்களிலிருந்து பழுத்த சிற்றிலைகள் மழைபோல் பறந்து விழுந்து கொண்டிருந்தன. குளிர்ந்துபோன மேகங்கள் ஒரே சீராக ஊசித்தூரல் போட்டன. ஈரம் பட்ட சருகுகள் சத்தமடங்கி பாதைகளை மூடின. இதனிடையேதான் ஊரின் நடுப்பகுதிக்குள் பெரிதும், சிறிதுமான குடிசைகளைக் கடந்து நடந்து சென்று கொண்டிருந்தான் சுந்தர்.

வெள்ளை ரோசாப்பூ நிறத்தில் தலைப்பாகை வைத்திருந்தான். அதே நிறத்தில் வேட்டியை மிக நேர்த்தியாய் வட்டத்தார் பாய்ச்சிக் கட்டியிருந்தான். அத்தோடு காப்பித்தூள் நிறத்தில் கழுத்துவரைப் பித்தான்கள் பூட்டிய முழுக்கைச் சட்டையும் அணிந்து ஒய்யாரமாய் நடந்தான்.

அரும்பு மீசையும், நிமிர்ந்த நடையும், மிடுக்கான தோற்றப் பொலிவுடனும் தெருக்களின் இருமருங்கிலும் இருந்த வீடுகளைப் பார்த்துக் கொண்டே நடந்தவனை ஆங்காங்கே நின்றிருந்தவர்கள் ஒருவித மலைப்போடு பார்த்தனர். ஆனால் ஒருவரும் அவன் முகத்தையோ அதில் மின்னிக்கொண்டிருந்த நீண்ட விழிகளின் கம்பீரத்தையோ பார்க்கவில்லைப் போலும். . . ! கவனித்திருந்தால் அவன் யாரென்று யூகித்திருக்க வாய்ப்பிருந்திருக்கும்.

அவனது வித்தியாசமான ஆடையின் மீதும், வீரம் செறிந்த நடையிலும்தான் அவ்வூராரின் பார்வைப் படிந்திருந்திருக்க வேண்டும்.

படித்தவர்களையோ உயர்ந்த அந்தஸ்திலிருப்போரையோ நேருக்கு நேர் முகம் பார்த்து பேசும் பழக்கம் அவர்களுக்குக் கிடையாது. அது ஒருவித தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடுதான். தலைப்பாகையோடு வேட்டியும், சட்டையும் அணிந்தவர்கள் கண்டிப்பாக அதிகாரிகளாகத் தான் இருக்க முடியும் என்ற பதிந்துபோன எண்ணம் தான் அவர்களை வேறு எந்தக் கோணத்திலும் சிந்திக்கவிடாமல் வைத்திருந்தது.

'இவன் ஆங்கிலேயர்களின் அலுவலகப் பணியாளனாகவோ, நவாப்பின் அதிகாரிகளில் ஒருவனாகவோ இருப்பான்' என்றும் பேசிக்கொண்டனர்.

அரைகுறையாய் காதில் விழுந்த அவர்களது வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொண்டு புன்முறுவலோடு முகத்தில் சாந்தம் மிளிர சுற்றும் முற்றும் பார்த்தபடியே நிதானமாக நடந்தான்.

இந்த ஆறு, ஏழு ஆண்டுகளில் பெரியளவில் ஊரில் எந்த மாற்றங்களும் இருந்ததாக அவனுக்குத் தெரியவில்லை. பெரியவர்கள் எல்லோரும் தோற்றத்தில் மாற்றங்கள் இன்றி அதே போன்றுதான் இருந்தனர். தன் வயதில் இருந்தவர்கள் தன்னைப்போன்றே வளர்ந்திருந்தார்கள். அவர்களது தோற்றத்தில் சிறியளவு மாற்றங்கள் தெரிந்தது. ஆனாலும் எளிதாக அடையாளம் கண்டு பிடிக்க முடிந்தது. இந்த ஏழு ஆண்டுகளுக்குள் பிறந்து வளர்ந்த குழந்தைகளைத் தான் அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை. இருந்தாலும் அவர்களிலும் அவன் அறிந்திருந்த பெற்றோர்களின் சாயல் தெரியாமலில்லை.

ஆனால் அவர்கள் எவராலும் தன்னைக் கண்டறிய முடியவில்லை. முற்றிலும் மாறுபட்ட நடை உடை பாவனைகள் அவனை அடையாளங்காண விடாமல் வைத்திருந்தது. அத்தோடு இறந்த போனதாக முழுநிச்சயமாக நம்பப்பட்ட ஒருவனை அவர்களால் நினைவுகூர இயலவில்லை.

தொலைவில் அவனோடு சிறு வயதில் சுற்றி அலைந்த கூட்டாளி மணி என்பவன், வீட்டிற்குள் இருந்து இரண்டு ஆட்டு குட்டிகளை இரண்டு அக்குள்களுக்குள்ளும் அணைத்தபடி வெளியில் இழுத்து வந்து கொண்டிருந்தான். அவனாவது தன்னைக் கண்டுகொள்வானா என்றால். . . இல்லை. !

இவனைப் பார்த்துவிட்டு சட்டென்று திரும்பி, ஆடுகளோடு எதையோ கொஞ்சலாகப் பேசிக்கொண்டே முற்றத்தில் அறையப்பட்டிருந்த முளைக்கம்பில் அவற்றைக் கட்டிக் கொண்டிருந்தான். அவனைக் கைநீட்டி கூப்பிட வாயெடுத்த சுந்தர், பிறகு எதுவும் பேசாமல் மலர்ந்த முகத்தோடு நடந்தான். யாராவது தன்னைக் கண்டுபிடித்து பேசிவிட மாட்டார்களா என்ற எதிர்பார்ப்போடு சென்றான். அவனது மனம் விவரிக்கமுடியாத பூரிப்பில் இருந்தது.

பாதையிலிருந்து சில அடிகள் வலப்புறம் தள்ளியிருந்த அந்த அகன்ற புளியமரத்தடியில் அவனை அறியாமலே கால்கள் நடக்க மறுத்து நின்றன. பெருமூச்சோடு மரத்தை அண்ணாந்து பார்த்தான். அது காற்றில் மேலும் கீழும் ஆடிக் கொண்டிருந்தது.

அவன் ஊரிலிருந்து ஓடிப்போன போது இருட்டும்வரை அதில்தான் ஒழிந்திருந்தான். தன்னை யாராவது தேடி வரமாட்டார்களா என்ற ஏக்கத்தோடு காத்திருந்தான்.

இருட்டிய பிறகும் காணவில்லையே என்று எவரும் தன்னைத் தேடவில்லை. தன் தாயை நினைத்து ஏங்கி அழுத அந்த கணம் அவனுக்குள் சற்றுமுன் நடந்ததைப் போல் கனத்தது. இரவெல்லாம் அதிலேயே அயர்ந்து உறங்கினான். அதிகாலை நான்குமணிக்கு முன்பே இறங்கி ஊரைவிட்டுச் சென்ற அந்த நினைவுகள் வேதனையாய் படர்ந்தது.

அந்த நேரத்தில்தான், சற்றுத் தொலைவில் 'முத்து. . . . எலே முத்து. . . . 'என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு ஆனந்தம் மேலிட திரும்பினான். ஐந்து, ஆறு வயதிலான சிறுவன் ஒருவன் ஓடிக்கொண்டிருக்க பெண் ஒருத்தி அவனைப் பிடிக்க துரத்திக் கொண்டு வந்தாள். அந்தச் சிறுவன் அந்தப் புளியமரத்தடிக்குதான் ஓடி வந்து கொண்டிருந்தான், ஒளிவதற்காக. அவள் அவனை விடாமல் துரத்தியபடி ஓடிவந்தாள். கையில் ஒரு அலுமினிய தட்டில் சோற்றைப் பிசைந்தபடியே வந்தாள். அந்தச் சிறுவனுக்குச் சோறூட்டதான் இந்த அழைப்பும், ஓட்டமும். !

அவளைப் பார்த்ததும் சுந்தர் உறைந்துபோய் நின்றான். அந்தப் பெண் அவனது உடன் பிறந்த ஒரே சகோதரி.

அக்காள். சில வினாடிகள் அவனது இதயம் நின்று துடித்தது. அவனது பெற்றோர்கள் இறந்தபிறகு அவனுக்கிருந்த ஒரே உறவு அவள்தான். தன்னை அணைத்துக் கொள்ளும் ஒரே ஆறுதல் அவள்தான். தன்னைக் காணாமல் எப்படி அழுதிருப்பாள். . . ! என்ற சோகம் தாக்க. . . அவளையே உற்றுப் பார்த்தான்.

அவள் அவனருகில் வந்தும் அவனது முகத்தை ஏறிட்டுப் பாராமல் கையிலிருந்த தட்டையே பார்த்தபடி அந்த மரத்தை நோக்கி சென்று கொண்டிருந்தாள்.

மீண்டும். . . . 'ஏலே முத்து. யாமுல்ல இப்படி செய்தா. ? தெனமும் உனக்கு இதே வேலையால. ஒருவாய் தின்னு தொலையமுல'என்று கோபித்துக் கொண்டே ஓடினாள். சுந்தரால் அதற்குமேல் அடக்கிக் கொள்ள முடியாமல். . . 'யெக்கோ. . . 'என்றான்.

அவள் லேசாகத் திரும்பினாள் ஆனாலும். . . மீண்டும் சட்டென திரும்பி மகனை நோக்கி நடந்தாள். இரண்டடி எடுத்து வைத்தவள். . . தயக்கத்தோடு நின்றாள். அந்த அவனது அழைப்பு மீண்டும் கேட்டது. . . 'யெக்கா. . . ' என்றான் தொண்டையை அடைத்த துக்கத்தை விழுங்க இயலாமல் சத்தம் தளதளத்தது. அவள் திரும்பி வியப்பில் மேலிருந்து கீழாக ஒருமுறை அவனைப் பார்த்தாள். பிறகு முகத்தை உற்றுப்பார்த்தாள்.

அவன் தலையிலிருந்த தலைப்பாகையை எடுத்தான்.

'யாரு. . . யாரு. . . த. . . த. . . ம். . . பியோவ். . . 'என்றாள்.

கை நடுங்கி தட்டு கீழே விழ. . 'மு த்து. . . 'என்று அலறினாள். ஒளிந்து கொண்டிருந்த மகன் ஓடிவந்தான். சுந்தரும் அவளருகே வந்தான். 'நாந்தானக்கா உன் முத்து' என்றான்.

'தம்பி. . . . நீ. . . நீ. . . எங்கல போயிருந்தா. ? எல்லாரும் நீ செத்து போயிட்டானிட்டாவல. எனக்கின்னிருந்த ஒருத்தன் நீ மட்டுந்தானல. ஒன்னையும் சாமி தூக்கிட்டு போயிட்டேன்னு நான் அழாத நாளுல்ல. இத பாரு எம்புள்ளைககும் உன் பேருதான் வெச்சிருக்கேன். முத்துக்குட்டி. எலே உன் மாமன் வந்துட்டான், உசுரோட. ! பாருல. . . என் தம்பி. இது என்ன துணிமணியெல்லாம் தொரை வீட்டு புள்ள மாதிரி வந்திரிக்கியே. . . என் தங்கமே. நான் என்ன சொல்வேன். . என்ன செய்வேன். . . எல்லோரும் வாங்களேன். . . பாருங்களேன். . . .

என் தம்பி. . . 'என்றவள் ஏதேதோ சொன்னாள். அவளது அன்பில் கண்ணீர் மல்க, நனைந்து நின்றான் சுந்தர்.

'அத்தையோ. . . . மாமோய். . . .

சித்தப்போ, ஏய் மைனி. . . . எல்லாரும் வாங்களேன். . என் ஒடன்பெறப்பு வந்துட்டான். வாங்க,

வந்து பாருங்கல்லாரும்'என்று கூச்சலிட்டாள். சுந்தர் தனது மருமகன் முத்துக் குட்டியைத் தூக்கினான். அவன் மிரட்சியோடு அவனையே பார்த்தான்.

'எலே. . . உன் மாமன். கூப்டுல. மாமான்னு கூப்பிடு. . . . உனக்கு மாமன் கிடைச்சிட்டான்ல' என்றாள் ஆனந்த கண்ணீர் வடிவ வடிய.

அவன், 'மா மா. . மாமா' என்றான் தயக்கத்தில். சுந்தர் அவனை அணைத்து முத்தத்தால் நனைத்தான். அதற்குள் அந்தத் தெருவிலிருந்த எல்லோரும் கூடிவிட்டனர்.

'என் முத்து வந்துட்டான். . . ' என்று அவள் எல்லோரையும் பார்த்தபடி கூறினாள். மகிழ்ச்சியில் என்ன சொல்வதென்றே தெரியாமல் அங்குமிங்கும் நடந்தாள். சுந்தரையே பார்த்தாள். அவன் அவளது அன்பில் மூழ்கியிருந்தான். மருமகனைத் தூக்கி வைத்திருந்தான். எல்லோரும் செத்து போனதாக நம்பம்பட்டவன் நேரில் வந்து நிற்பதைப் பார்த்து திகைப்பும் ஒருவித பயமும் கலந்து அவனையே பார்த்தனர்.

சுந்தர் மறுமகனைக் கீழே இறக்கி விட்டு, எல்லோரையும் பார்த்தான். 'நான் முத்து தான்' என்றான் புன்னகைத்தபடியே.

'ஏய் மணி, உனக்குமா என்னைத் தெரியல ?' என்றான்.

'ஆமா தெரிஞ்சுது. நீ எங்க வீட்டுகிட்ட நடந்துபோனியே அப்பமே எங்கயோ பாத்தமாறி இருக்கேன்னு மனசுகுள்ள ஏதோ சொல்லுச்சி' என்றான் மணி.

முத்து சிரித்தபடியே தனது மாமாவையும் அத்தையையும் தேடினான். எல்லோர் பார்வையும் அவன் மேலேயே இருந்தது. 'மாமாவையும் அத்தையும் எங்கே அக்கா, காணலையே' என்றான்.

'அவிய ரெண்டுவேரும் வெளைக்குப் போயிருக்காவ முத்து. காணம் வெதக்க. கஞ்சி கொண்டு போவல. இப்பம் வந்திருவாவ. நான் போய் கூட்டிட்டு வாரேன். வா வீட்டுக்கு' என்று அவன் கையைப் பிடித்தாள். 'மாரி நீ இங்க இரு. நான் போயி கூட்டிட்டு வாரேன். நீ முத்த கூட்டிட்டு வீட்டுக்குப் போ' என்ற மணி அவர்களை அழைத்துவர ஓடினான்.

'எலேய் முத்து ஒன்னைய பாக்க மயமா இருக்குல. எங்க இருந்துல வாரா. ? வெள்ள காரன்கிட்ட வேலை பாக்கியால?' என்றாள் பூவாத்தாள் பாட்டி.

அவன், 'இல்லபாட்டியோ, ஒரு பெரிய ராசா வீட்ல வேலை செய்தேன், அவருதான் இந்த உலகத்தையே படைச்சவரு. வாங்க எல்லா வெவரமும் சொல்லுதேன்' என்று அக்கா மாரியோடு வீட்டை நோக்கி நடந்தான்.

சொந்த ஊரில் அவனது சொல்லும், செயலும் அவர்களைப் போலவே மாறியது. இதுவரை தான் வேறெந்த உலகிலேயோ இருந்து வந்ததைப்போலவே உணர்ந்தான் சுந்தர். ஊர் முழுவதும் அவன் வந்த செய்தி தெரிந்து எல்லோருமே கூடிவிட்டனர். மாரியின் வீட்டில் அவள் கணவர் வெளியூர் சென்றிருந்தான். அவள், வா வா. . உள்ள' என்றாள்.

அவன் திரும்பி எல்லோரையும் பார்த்தவன், அவர்களை விட்டு உள்ளே செல்ல மற்று வாசலிலேயே நின்று முகம் மலர எல்லோரையும் பார்த்தான். இப்போது அவர்களது முகத்திலும் இயல்பு நிலை நிலவியிருந்தது. அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். தொலைவில் அழுகுரல் கேட்டது. 'ஏ. . முத்து. . . எஞ்செல்வமே. . . ராசா. . . நீ வந்திட்டியா. . . !?' என்ற அத்தையின் சத்தம் கேட்க. எல்லோரும் அதே மனநிலைக்கு மாறி அழத் தொடங்கினர்.

முத்து எதிர்கொண்டு போனான். மாரியும் சத்தமிட்டு அழத்தொடங்கினாள். ஓடி வந்த சுந்தரின் மாமா அவனை அணைத்து முத்தமிட்டார்.

'ஏய்யா. . . எங்கேயே போனா, ? உங்கம்ம இருந்து, அவா உன்னை அடிச்சான்னா அவளுக்கு இப்படியா தண்டண குடுப்பா?, நான் சாவாம செத்துட்டேன்யா. பொணமாதாய்யா அலைதேன்' என்று அத்தை அழுதாள்.

'அழாதேங்க அத்தையோ. எல்லாம் அந்தக் கடவுள் செயல்தான். உங்க மூலமா கடவுள் நல்லதைதான் செஞ்சிருக்கார். நீங்க யாரும் எந்த தப்பும் செய்யல அத்த'. என்றான்.

'ஆமா புள்ள. நம்ம முத்து இப்ப எப்படி சிங்கம் மாறி வந்திருக்கான் பாரு. எதுக்கு இந்த நல்ல நேரத்தில போயி இப்படி அழுதா. இவ்ளோ நாளா அழுதது போதாதா. உடுமா. . . சந்தோசமா இரு தாயி. , 'என்றாள் அதில் நின்றிருந்த ஒருத்தி.

'ஆமாய்யா, எப்பிடிய்யா இருக்கா. எங்க போயிருந்தா நீ. ஆச்சிரியமா இருக்குயா. உம்பேச்சும் மாறிட்டு. சொல்லுயா' என்றார் மாமா ஆனந்தம் பொங்க.

'மாமா. . எல்லாத்தையும் நான் சொல்தேன். உங்களையெல்லாம் திரும்ப பாப்பேன்னு நினைக்கவே இல்ல. ஆனா என்னை அழைத்து கொண்டுபோன என் ஆண்டவர் தான் இறக்கம் செய்து உங்களையெல்லாம் பார்க்க வச்சிருக்கிறார்'என்றான்.

'என்னையா சொல்லுதா? ஆண்டவரா, யாருய்யா அவரு? அவரு எதுக்கு இங்கிருந்து உன்னைக் கூட்டிட்டு போனாரு? அப்டினாலும் எங்கிட்டையாவது சொல்லிட்டு போவாண்டாமாய்யா? ரொம்ப வெதனையடஞ்சிட்டோம் முத்து. பரவாயில்லப்பா. திரும்ப வந்துட்டியே அதே போதும்பா எங்களுக்கு. நீ செத்து போயிட்டதா நம்ம சாமி கூட சொல்லிட்டுப்பா. அதுதான் சயிக்கவே முடியலப்பா', என்றார் மாமா. கூட்டத்துக்குள் நின்ற சாமியாடி குறிச் சொல்லும் பாட்டியை சிலர் திரும்பி பார்த்து முறைக்க. . .

'யாமுல்ல என்னையே இப்பிடி பாக்கிய. ?நானா சொன்னேன். அவள் என்ன சொன்னாளோ அததான நாஞ்சொன்னேன். !? நான் சொன்னது அந்த முத்துபயலை. இவன் யாரோ எனக்கு தெரியாது. இவன் முத்து இல்லை. கோட்டிக்காரனுவளா. ஆத்தா வாக்கையா சந்தேகப்படுதிய. ? என்றவள் விரிந்து கிடந்த முடியை தூக்கி முடிந்தபடி விறுவிறு என்று நடந்தாள்.

+91 73971 56808

தொடர்ந்து பயணிப்போம்...

திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு-10

திருமதி. ரெமினா சஜித்

திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு – பகுதி 10

முந்தைய அத்தியாயங்களில், திருநெல்வேலியில் கிறிஸ்தவத்தின் ஆரம்பகால வேர்கள், சத்தியநாதன் மற்றும் ஜெனிக்கே போன்ற முன்னோடி மிஷனரிகளின் பங்களிப்பு, மற்றும் முதலூர் போன்ற கிறிஸ்தவ கிராமங்களின் தோற்றம் ஆகியவற்றைப் பற்றி விரிவாகக் கண்டோம். குறிப்பாக 1798 முதல் 1802 வரையிலான காலகட்டத்தையும், கெரிக்கே மற்றும் ஜெனிக்கேயின் 1800 ஆம் ஆண்டு பயணத்தையும், திருச்சபையின் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய பணிகளையும் பார்த்தோம். பாளையக்காரர் கிளர்ச்சியின் மத்தியிலும், பஞ்சம் போன்ற இன்னல்களின் மத்தியிலும் விசுவாசிகள் எவ்வாறு நிலைத்து நின்றனர் என்பதையும் கண்டோம். 1802 ஆம் ஆண்டு கெரிக்கேயின் வருகையும், அதைத் தொடர்ந்து நிகழ்ந்த வெகுஜன ஞானஸ்நானங்களும் திருநெல்வேலி திருச்சபையின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கின.

இந்த மாதப் பதிப்பில், கெரிக்கேயின் 1802 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதப் பயணத்தின் தொடர்ச்சியையும், அக்டோபர் மாதத்தில் நிகழ்ந்த அசாதாரணமான ஆவிக்குரிய அறுவடை மற்றும் ஞானஸ்நானங்கள் பற்றியும், கிறிஸ்தவத்தின் ஆழமான வேரூன்றலை ஏற்படுத்திய முக்கியமான நிகழ்வுகளையும் ஆராய்வோம்.

கெரிக்கே மிஷனரி பணி நாட்குறிப்பு – அக்டோபர் 1ம் தேதி

காலை ஜெபத்திற்குப் பிறகு அவர்கள் பயணம் தொடங்கி நடுவகுறிச்சி (Naduvakurichi) என்ற இடத்திற்கு வந்தடைந்தனர். அங்கு பல கிறிஸ்தவர்கள் அவர்களை சந்திக்க வந்தனர், அதில் முந்தைய நாள் ஞானஸ்நானம் பெற்றவர்களும் இருந்தனர். அவர் அவர்களுக்கு உபதேசம் செய்து அவர்களுடன் ஜெபித்தார், மேலும் அந்த கிராமத்தின் பிற மதத்தவர்களுடனும் ஜெபித்தார். பின்னர் அவர்கள் பெத்லகேம் (Bethlehem) என்ற புதிய கிராமத்திற்குச் சென்றனர். அந்த கிராமத்தில் ஒரு புதிய தேவாலயமும் இருந்தது, இது அங்கு குடியேறிய கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு உபதேசம் கேட்பவர்களால் கட்டப்பட்டது, அவர்கள் அதில் தேவனை ஆராதிப்பதர்க்காகவும் ஞானஸ்நானம் பெறும் நோக்கத்துடன் கட்டியிருந்தனர்.

அவர்கள் உடனே ஒன்றாக வந்து கூடினர், மேலும் அவர் வேதாகமத்தில் இருந்து வாதரோகியின் குணப்படுத்துதலைப் பற்றி அவர்களுக்கு பிரசங்கித்தார். உண்மையான இதயத்துடன் கிறிஸ்தவ போதனையை ஏற்றுக்கொண்டால், கர்த்தராகிய இயேசு அருளும் ஆசீர்வாதங்களை அவர்களுக்குக் காட்டினார், அதாவது அவர்களின் பாவங்களின் மன்னிப்பும், பரிசுத்த வாழ்க்கை நடத்தும் பலமும். இயேசுவின் மீதான விசுவாசத்தின் மூலம் அவர்கள் இப்போது மன்னிக்கப்பட்ட மற்றும் அன்பானவர்களாகிய தேவனின் மகன்களும் மகள்களும் ஆகிவிட்டனர் என்று அவர்களிடம் கூறினார். பின்னர் அவர்களின் பிற மதப் பெயர்கள் குடும்பம் வாரியாக எழுதப்பட்டன, மேலும் அவற்றுக்கு எதிராக அவர்களின் புதிய கிறிஸ்தவ பெயர்களும் வைக்கப்பட்டன.

மாலையில் அவர்கள் அனைவரும் மீண்டும் ஒன்றாக வந்து கூடினர். வேதாகமத்திலிருந்து நூற்றுக்கதிபதி கொர்நேலியுவின் (Cornelius) சம்பவத்தைப் பற்றி அவர்களுக்கு பிரசங்கித்த பிறகு, நாற்பத்தெட்டு குடும்பங்களில் உள்ள 203 நபர்களுக்கு அவர் ஞானஸ்நானம் கொடுத்தார். ஒவ்வொரு குடும்பமும் அவர்களின் பிற மதப் பெயர்களின்படி வரிசையாக அழைக்கப்பட்டது. பின்னர் இந்திய குருமார் அறிமுக ஆராதனை முறைமையை படித்தார், மேலும் அவர் அவர்களிடம் இப்போது முழு இதயத்துடன் பழைய நம்பிக்கைகளை ஒழித்துவிட்டு, கிறிஸ்தவ விசுவாசத்தின் எல்லா பகுதிகளையும் விசுவாசித்து, கிறிஸ்துவின் போதனைக்கு கீழ்ப்படிந்து வாழ தீர்மானித்திருக்கிறீர்களா என்று கேட்டார்.

பின்னர் தந்தை, தாய், பிள்ளைகள், ஒவ்வொரு குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களும் ஒன்றாக முழங்கால் போட்டு, மேலும் உபதேசியார்கள் (Catechist) அவர்களின் கிறிஸ்தவ பெயர்களை உச்சரித்தபோது அவர் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். பல சந்தர்ப்பங்களில் ஒரு குடும்பத்தின் தந்தை ஞானஸ்நானம் பெறும்போது தனது வீட்டின் ஒன்று அல்லது மற்ற உறுப்பினர்களுக்கு மிகவும் உணர்ச்சிபூர்வமான அறிவுரை வார்த்தைகளை சொல்ல தூண்டப்பட்டார். இது மாலை ஆறு மணி முதல் நள்ளிரவு வரை நீடித்தது. சத்தியநாதன் (Sattiyanadan) மற்றும் உபதேசியார்கள் (Catechists) சொன்னார்கள், 'இது எங்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை போன்றது; இதற்கு முன்பு இந்த நாட்டில் இப்படிப்பட்ட ஒன்று பார்க்கப்பட்டதில்லை.'

2ம் தேதி

மீண்டும் சபையார் காலை ஜெபத்திற்காக கூடினர், அதற்குப் பிறகு அவர் அந்த மக்கள் தாங்களே தேர்ந்தெடுத்த நான்கு மூப்பர்களை நியமித்தார். அவர்கள் பல முக்கிய புறஜாதி மனிதர்களைச் சந்தித்தனர். அவர்கள் இன்னும் கிறிஸ்தவர்கள் ஆக முடிவு செய்ய முடியவில்லை. ஆனால் அவர்கள் பார்த்ததும் கேட்டதும் குறித்து திருப்தி தெரிவித்தனர்.

பின்னர் அவர்கள் நாவலடி (Navaladi) என்ற இடத்திற்குப் பயணம் செய்தனர். அங்கே கொிக்கே அவர்கள் கடந்த கிராமத்தில் செய்தது போலவே ஆராதனைகளை நடத்தினார். அனைத்தும் அதே வரிசையில் இருப்பதைக் கண்டார். ஆனால் அங்கே தேவாலயம் கட்டப்படவில்லை. ஏனென்றால் முழு கிராமமும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முடிவு செய்ததால், அவர்கள் தங்கள் பிறமத கோவிலை சுத்தம் செய்து கிறிஸ்தவ ஆராதனை நடத்துவதற்கு ஏற்றதாக மாற்றியிருந்தனர். இந்த மக்கள் சத்தியநாதன் மற்றும் உபதேசியார்களால் கற்பிக்கப்பட்டிருந்தனர். கொிக்கே அவர்கள் வேதாகமத்திலிருந்து இரத்தாம்பரம் விற்ற லீதியாளின் (Lydia) மனமாற்ற சம்பவத்திலிருந்து அவர்களுக்கு தேவ வார்த்தையை வழங்கினார். பின்னர் 53 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேருக்கு ஞானஸ்நானம் வழங்கினார். இவர்கள் அந்த இடத்தின் முழு மக்கள்தொகையும் ஆவர். இதன் பிறகு அவர் மூப்பர்களை நியமித்தார். அப்போது இரவு 11 மணி ஆகியிருந்தது. ஆனாலும் அவர்கள் குண்டல் (Kundal) என்ற இடத்திற்குச் சென்றனர்

3ம் தேதி

குண்டல் என்ற முழு கிராமமும் தேவனின் வார்த்தையைக் கேட்பதற்காகவும் ஞானஸ்நானம் மூலம் கிறிஸ்தவ திருச்சபையின் அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளப்படுவதற்காகவும் அவருக்காக காத்திருந்தது. இங்கும் பிறமத கோவில் சில காலமாக ஜெப ஆலயமாக மாற்றப்பட்டிருந்தது. அவர் பிலிப்பி (Philippi) பட்டணத்தில் இருந்த, பவுலும் சீலாவும் அடைக்கப்பட்டிருந்த சிறையின் சிறைக்காவலனின் இரட்சிப்பின் அனுபவத்தை பற்றி பிரசங்கித்தார், பின்னர் 62 குடும்பங்களைச் சேர்ந்த 248 பேருக்கு ஞானஸ்நானம் வழங்கினார். முழு ஆராதனையும் காலை 8 மணி முதல் 23 மணி வரை நீடித்தது. அங்கிருந்து அவர்கள் காரிகோவில் (Karikóvil) என்ற இடத்திற்குச் சென்றனர், அங்கும் மீண்டும் முழு கிராமமும் அவர்களுக்காக காத்திருந்தது, மேலும் உபதேசியார் (Catechist) ஏற்கனவே அவர்களின் பெயர்களை குடும்பம் வாரியாக எழுதி வைத்திருந்தார்.

அவர்களுக்கு கிறிஸ்துவின் உபதேசத்தை செய்த பிறகு, அவர் நாற்பத்தாறு குடும்பங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார், அதில் 234 பேர்கள் இருந்தனர். இந்த ஆராதனை மாலை ஏழு மணி முதல் நள்ளிரவு வரை நீடித்தது. இந்த கிராமம் ஒரு நீண்ட தெருவைக் கொண்டிருந்தது, அதன் தெற்கு முனையில் முன்னாள் கோவில் இருந்தது, இப்போது அது ஜெப ஆலயமாக இருந்தது. வீதியில் உள்ள ஒவ்வொரு வீட்டின் குடியிருப்பாளர்களும், இளையவர்களும் வயதானவர்களும் எப்படி ஜெப ஆலயத்திற்கு வந்தனர் என்பதைப் பார்த்து அவர் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு மகிழ்ந்தார்.

உபதேசியார்களும் (Catechists) மற்ற இடங்களிலிருந்து அவர்களைப் பின்தொடர்ந்து வந்த கிறிஸ்தவர்களும் மக்கள் இடத்தை நிரப்புவதைப் பார்த்தபோது, 'இது விக்கிரக கோவிலாக இருந்தபோது இங்கு இவ்வளவு மக்கள் வந்ததில்லை. தேவன் மனுஷர்களை உண்மையான சத்தியத்திற்கும் ஞானஸ்நானத்திற்கும் நேராக வழி நடத்துகிறார்' என்று சொன்னார்கள்.

4ம் தேதி

அவர் சபையாரை மீண்டும் ஒன்றாக கூட்டினார், காலை ஜெபத்திற்குப் பிறகு மூப்பர்களை நியமித்தார், மேலும் இந்த கிராமத்திலும் அண்டை கிராமங்களிலும் விட்டுச்செல்ல நினைத்த உபதேசியார்களையும் (Catechists) உதவியாளர்களையும் கர்த்தரிடம் ஒப்படைத்தார், அவர்களுடன் வேப்பேரியில் (Vepery) இந்த வேலைக்காக பயிற்சி பெற்ற ஒரு வாலிபரும் இருந்தார். பின்னர் அவர் உவரி (Uvari) என்ற கிராமத்திற்குச் சென்றார். இந்த நான்கு கிராமங்களும் (அதாவது நவலாடி, குண்டல், காரிகோவில் மற்றும் உவரி) மனப்பாடு (Manappad) மற்றும் கன்னியாகுமரிக்கு (Cape Comorin) இடையில் கடற்கரையில் அமைந்துள்ளன, மேலும் அவை அமைந்துள்ள நிலப்பகுதி கோரை சுட்டு (Korai Suttu) என்று அழைக்கப்படுகிறது.

உவரி (Uvari) மக்கள் முந்தைய நாள்தான் தங்கள் பழைய விக்கிரக கோவிலை சுத்தம் செய்து அதை ஜெப ஆலயமாக மாற்ற தொடங்கியிருந்தனர், எனவே அவர்கள் கோவிலின் முன்பாக சந்திக்க ஒரு இடத்தை தயார் செய்திருந்தனர், மேலும் ஐந்நூறு பேர் கொண்ட சபையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால் மதியம் வரை மக்கள் வராததால், மேலும் அவரது நேரம் குறுகியதால், குருவானார்கள் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்றும், அல்லது அவர்களில் வர முடிந்தவர்கள் முதலூர் (Mudalur) வந்து ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றும் பரிந்துரைத்தார். எனினும், கிராமத்தின் முக்கிய மனிதர்கள் அவர் தங்கி மற்ற கிராமங்களில் செய்தது போலவே இங்கும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

மதியத்தில் அவர் கற்றுக்கொண்டார் ஒரு குறிப்பிட்ட பிற மதத்தவர், கடுமையான எதிரியாக இருந்து, பாளையக்காரர் (Poligar) பிரச்சனைகளின் போது முதலூர் (Mudalur) கிறிஸ்தவர்களை தங்கள் இரட்சிப்பின் வழியிலிருந்து விலக வைக்க முடிந்த அளவிற்கு துன்புறுத்தியவர், இப்போது இந்த பகுதியின் ஏழை மக்கள் கற்றுக்கொள்ள வராமல் தடுக்க தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்திருந்தார். எனினும், அவர் தனது மிரட்டல்களாலும் வாக்குறுதிகளாலும் தடுக்க முடியாத சிலர் வந்து, அடுத்த நாள் வரை அவர்களுடன் தங்கும்படி அவரிடம் கேட்டுக்கொண்டனர். மாலையில் அவர் விதைப்பவனின் (Sower) உவமையைப் பற்றி பிரசங்கித்தார், மேலும் மக்களின் கவனத்தில் அவர் நன்றாக திருப்தியடைந்தார்.

5ம் தேதி

இந்த நாள் முழுவதும் மக்களுக்கு கிறிஸ்துவின் உபதேசங்களை கற்பிப்பதில் செலவழிக்கப்பட்டது. அவரிடம் வந்தவர்களில் இரண்டு சிப்பாய்களின் காவலில் இருந்த ஒருவர் இருந்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிராமத்தை கொள்ளையடித்ததில் ஈடுபட்டிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்படுவதற்கு முன்பு அவர் உபதேசியாரிடமிருந்து (Catechist) கற்றுக்கொள்வதில் தொடர்ந்து கவனம் செலுத்திவந்தார், மேலும் இப்போது இந்த குற்றத்திற்காக சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருந்தார். ஆனால் அவர் தனது சிறைவாசத்தின் போது வேத புத்தகங்களைப் படித்து கிறிஸ்துவையும் கிறிஸ்தவத்தையும் பற்றி நிறைய கற்றுக்கொண்டதாக சொல்லி ஞானஸ்நானம் பெற அனுமதி கேட்டார்.

அன்று அவர் களைகளும் கோதுமையும் (Tares and Wheat) பற்றிய இயேசுவின் உவமையைப் பற்றி பிரசங்கித்தார், அதற்குப் பிறகு இருபத்து மூன்று குடும்பங்கள், அதில் 102 பேர்கள், ஞானஸ்நானம் பெற்றனர். நள்ளிரவுக்கு இரண்டு மணி நேரம் கழித்துதான் அவரால் எந்த ஓய்வும் எடுக்க முடிந்தது. இந்த பயணம் இதோடு முடியவில்லை இன்னும் பல ஞானஸ்நானம் பற்றின குறிப்புகளை வருகின்ற பதிவுகளில் காணலாம்.

கெரிக்கேயின் 1802 ஆம் ஆண்டு அக்டோபர் மாதப் பயணம், திருநெல்வேலி திருச்சபையின் வரலாற்றில் ஒரு பொற்காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. பெத்லகேம், நாவலடி, குண்டல், காரிகோவில் மற்றும் உவரி போன்ற கிராமங்களில் நிகழ்ந்த மாற்றங்களும் நூற்றுக்கணக்கானோருக்கு ஞானஸ்நானம் வழங்கப்பட்டதும் தேவனின் வல்லமைக்கு சான்றாக அமைந்தன. சிலை கோவில்கள் ஜெப ஆலயங்களாக மாற்றப்பட்டதும், குடும்பங்கள் குடும்பமாக கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டதும், கிறிஸ்துவின் சுவிசேஷம் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் எவ்வாறு ஊடுருவியது என்பதைக் காட்டுகிறது. சத்தியநாதன் மற்றும் பிற உபதேசியர்களின் விடாமுயற்சியும், கெரிக்கேயின் ஊக்கமும், உள்ளூர் மக்களின் உண்மையான தேடலும் ஒன்றிணைந்து, திருநெல்வேலியில் ஒரு பெரிய ஆவிக்குரிய எழுச்சியை ஏற்படுத்தின.

பாளையக்காரர் கிளர்ச்சி போன்ற கடினமான காலங்களிலும், மிஷனரிகள் மற்றும் உள்ளூர் ஊழியர்களின் அயராத பணிகளும், விசுவாசிகளின் உறுதியான நம்பிக்கையும் திருச்சபையை வளரச் செய்தன. எதிர்ப்புகள் வந்தபோதும், சுவிசேஷத்தின் வல்லமை மக்களை ஈர்த்தது. இதற்கெல்லாம் கிறிஸ்துவின் சுவிஷேசம் வேதத்தின் அடிப்படையிலேயே போதிக்கப்பட்டது; அங்கு அவர்கள் தங்களின் சுயகருத்துக்களையும் சுய பெருமையும் பிரசங்கிக்காமல், கிறிஸ்துவையும் வேதத்தின் மகத்துவங்களையும், வேதாகமத்தின் சம்பவங்களையுமே மக்களுக்கு போதித்தனர். இந்த நிகழ்வுகள், தேவனுடைய இராஜ்யத்தின் வளர்ச்சி மனிதனின் எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டது என்பதையும், சரியான நேரத்தில், சரியான இடங்களில் கர்த்தரே தமது ஊழியத்தை நிறைவேற்றுகிறார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றன.

“அழிவின் குரல்கள் எழுந்தபோதும், ஆவியின் பாடல் மங்கவில்லை;

குடும்பங்கள் மண்டியிட்டு புதிய பெயரில் எழுந்தன;

பரலோக தேவனின் கிருபை, திருநெல்வேலியில் விதைக்கப்பட்ட விதையை,

அற்புத அறுவடையாக்கியது.“

நூற்றாண்டு ஆனந்தப்பண்டிகையைக் காணும்

மகிழ்ச்சிபுரம் சபை

ஜா.ஜான் ஞானராஜ்
திருநெல்வேலி

தூத்துக்குடி மாவட்டத்தின் தென்மேற்கு எல்லையோர கிராமமாக இருப்பது மகிழ்ச்சிபுரம் கிராமம். திருநெல்வேலியில் இருந்து சுமார் 20 கி. மீ தொலைவில் உள்ள இக்கிராமம் திருநெல்வேலியில் இருந்து சாத்தான்குளம் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிற பருத்திப்பாடு என்ற கிராமத்தில் இருந்து திருவைகுண்டம் நோக்கி செல்லும் பாதையில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

அறிமுகம்

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருமண்டலத்தின் ஆழ்வாநேரி சர்க்கிள் எனும் பாரம்பரிய சர்க்களின் கிழக்கு எல்லை கிராமமாக அந்த சர்க்கிளுக்கு உட்பட்ட ஆழ்வாநேரி சேகரத்தின் கிளைச் சபையாக நெடுங்காலமாக இருந்த இக்கிராமம் மாவட்ட அடிப்படையில் ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி, தூத்துக்குடி என இரு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டதன் காரணமாக ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருமண்டலமும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி - நாசரேத் என இரு திருமண்டலங்களாக பிரிக்கப்பட்டபோது மாவட்ட அடிப்படையில் மகிழ்ச்சிபுரம் திருச்சபை தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலத்தோடு சேர்க்கப்பட்டது. தொடக்கத்தில் மீரான்குளம் சேகரத்திலும் அதன் பின் சாலைப்புதூர் சேகரத்திலும் கிளை சபையாகவும் இருந்த மகிழ்ச்சிபுரம் திருச்சபை 2023 முதல் புதிய சேகரமாக உருவானது.

மகிழ்ச்சிபுரம் - பெயர் காரணம்

தொடக்க காலத்தில் இக்கிராமம் சிரியந்தூர் என்றழைக்கப்பட்டது. இன்றளவும் அநேக வயதான பெரியோர்கள் இந்த பெயரை நினைவு கூறுகின்றனர். சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பாக இக்கிராமத்துக்கு அடிக்கடி வந்து இக்கிராமத்தை நேசித்தவரான பிற்காலத்தில் பேராயரான அருட்பெருந்திரு செல்வின் துரை அவர்கள் இக்கிராமத்தாரின் பக்தி நெறி விசுவாசத்தை கண்டு வியப்படைந்து இனி இக்கிராமம் சிரியந்தூர் என்று அழைக்கப்படாமல் மகிழ்ச்சிபுரம் என்று அழைக்கப்படும் என் அறிவித்ததன் அடிப்படையில் அது முதல் இக்கிராமம் மகிழ்ச்சிபுரம் என்று அழைக்கப்படுகிறது. தொடக்க காலத்திலேயே சுமார் 100 குடும்பங்கள் இக்கிராமத்தில் வசித்து வந்துள்ளனர். அதில் 80 குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பனையேற்று தொழில் செய்துள்ளனர்.

சிரியந்தூர் மகிழ்ச்சிபுரம் கிராமம் உருவான வரலாறு

இன்றைய சிரியந்தூர் மகிழ்ச்சிபுரம் கிராமத்தில் சுருளை வம்சம் காடன்குளம் அம்சம் அருமநேரி வம்சம் என மூன்று குடும்ப வகையறாக்கள் வசித்து வருகின்றனர். மூன்று தரப்பாரும் எந்த கிராமத்தில் இருந்து சிரியந்தூர் மகிழ்ச்சிபுரத்தில் குடியேறினார்களோ அந்த பூர்வீக கிராமத்தைச் சார்ந்த பெயராலேயே இன்றளவும் அழைக்கப்பட்டு வருகின்றனர்.

1.சுருளை

மூலைக்கரைப்பட்டிக்கருவில் சில கிலோமீட்டர் தொலைவில் சுருளை என்ற ஓர் சிறிய கிராமம் உள்ளது. சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பாக சுருளை கிராமத்தில் காலரா நோய் வேகமாக பரவியதன் காரணமாக அந்தகிராமத்தில் பெரும்பாலானோர் மரணமடைந்து கொண்டே வந்தனர். சுருளை கிராமத்தில் வசித்து வந்த பலவேசமுத்து குடும்பத்தினர் அந்த ஊரை

விட்டு வெளியேறி பருத்திப்பாட்டில் இருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் கிழக்கே இருந்த சிரியந்தூர் கிராமத்திற்கு வருகை தந்தனர். அங்கு ஒரே ஒரு சைவ வேளாளர் குடும்பம் மாத்திரம் வசித்து வந்தனர்.

அந்த சைவ வேளாளர் குடும்பத்தினரிடம் தங்களது சொந்த ஊரில் காலரா பரவி இருப்பது குறித்தும் ஆதலால் தாங்கள் குடும்பமாக இங்கு தங்கி வாழ விரும்புவதாக தெரிவித்தனர் அவர்கள்அங்குதங்கிவாழபெரிதானஒருஇடத்தையும்பனைஏற்று தொழிலும் விவசாயமும் செய்ய நிலங்களையும் அவர்களுக்கு அந்த குடும்பத்தினர் கொடுத்தனர். தனிக் குடும்பமாக தொடர்ந்து அக்கிராமத்தில் வாழ விரும்பாத சைவ வேளாளர் குடும்பத்தினர் தங்களது நிலபுலன்கள் அனைத்தையும் பலவேசமுத்து நாடாரின் மகனாகிய ப. ஞானமுத்து குடும்பத்தினரிடம் அன்பளிப்பாகவே கொடுத்து விட்டு சிரியந்தூரை விட்டு வெளியேறினர். சிரியந்தூரில் தங்களது குடும்பத்தினர் நன்கு வசித்து வருவதை அறிந்த சுருளையில் வசித்து வந்த பலவேசமுத்து நாடாரின் குடும்ப உறவினர்கள் சுருளையை விட்டு வெளியேறி குழுவாக சிரியந்தூர் மகிழ்ச்சிபுரத்தில் குடியேறத் தொடங்கினர்.

2. காடன்குளம்

சுருளையில்இருந்துசிரியந்தூர்கிராமத்தில்குடும்பத்தினர் குடியேறத் தொடங்கிய அதே காலகட்டத்தில் காடன்குளத்தில் கிறிஸ்தவத்தை ஏற்றிருந்த நாடார்கள் தங்களை ஆதிக்கம் செலுத்தி வந்த கூந்தகுளம் பண்ணையார்களான ரெட்டியார்களின் சாதி ஆதிக்கத்தை விரும்பாததால் அங்கிருந்து பெருங்கூட்டமாக வெளியேறி சிரியந்தூர் மகிழ்ச்சிபுரத்தில் குடியேறினர். முதலில் மூன்று சகோதரர் சார்ந்த அவரது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என பெருங்குழுவாக சிரியந்தூர் மகிழ்ச்சிபுரத்தில் குடியேறினர். இந்த ஆதிகால மூன்று சகோதரர்களின் பெயர்களை அறிந்து கொள்ள இயலவில்லை.

3. அருமநேரி

சுருளை வம்சத்தார் காடங்குளம் வம்சத்தாரைத் தொடர்ந்து மூலைக்கரைப்பட்டி அருகில் உள்ள அருமநேரி கிராமத்தில் வசித்து வந்த இராமசாமி நாடார் அருமநேரி கிராமத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த மூலைக்கரைப்பட்டி பண்ணையார்களான ரெட்டிமார்களின் ஆதிக்கத்தை வெறுத்தவராக அருமநேரியில் இருந்து வெளியேறி குடும்பமாக சிரியந்தூரில் வந்து குடியேறினார். சிரியந்தூரில் அவர் குடியேறியதும் கிறிஸ்தவத்தை ஏற்று மாசில்லாமணி என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். இவருக்கு மூன்று மகன் இரண்டு மகள். மாசில்லாமணி என்ற ராமசாமி குடும்ப வழி மரபினர் சிரியந்தூரில் அருமநேரி வம்சத்தார் என்று அழைக்கப்படுகின்றனர்.

கிராமத்தில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்

சிரியந்தூர் என்று அழைக்கப்பட்ட மகிழ்ச்சிபுரம் கிராமத்தில் 1880 க்கும் 1890 க்கும் இடைப்பட்ட காலத்தில் கிறிஸ்தவம் அறிமுகமாகி இருக்கலாம் என்பதை இக்கிராமத்தில் செய்த நேரடி வரலாற்று கள ஆய்வு மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. பேராயர் சார்ஜென்ட் அவர்களின் இறுதிக்காலத்தில் இங்கிலாந்தில் இருந்து வருகை தந்த இளம் மிஷனரிகளான கனம். உவாக்கர், கனம். E. S கார் எனும் கார் மிஷனரி ஆகிய இருவரும் பாளையங்கோட்டை CMS மிஷனின் தலைமை கண்காணிப்பு மிஷனரிகளாக பொறுப்பேற்றிருந்த காலகட்டத்தில் இக்கிராமத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றிருக்க வேண்டும். இக்கிராமத்தின் தொடக்க கால குடும்பத்தைச் சார்ந்த பெரியவரான பலவேசமுத்து நாடாரின் மகனாகிய ப. ஞானமுத்து நாடார் கல்லறை கல்வெட்டு மூலம் அதை ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. இக்கல்வெட்டு சிரியந்தூர் மகிழ்ச்சிபுரம் கிராமத்தின் கிழக்கு பகுதியில் வயலில் உள்ளது.

முதல் கிறிஸ்தவ குடும்பம்

சுருளையில் காலரா நோய் தாக்கம் அதிகமாக இருந்ததின் காரணமாக சிரியந்தூரில் முதன்முதலில் குடியேறிய பலவேசமுத்து நாடார் அவர்களின் மகன் ப. ஞானமுத்து அவர்களே சிரியந்தூர் மகிழ்ச்சிபுரம் கிராமத்தில் முதன் முதலில் கிறிஸ்தவத்தை ஏற்றவர். இவரைத் தொடர்ந்து இரு தரப்பார் கிறிஸ்தவத்தை ஏற்றார்கள். சுருளை கிராமத்திலிருந்து சிரியந்தூர் கிராமத்தில் இரண்டாவதாக குடியேறிய சுருளை வம்சத்தார் அனைவரும் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள் அதே நேரத்தில் அதே காலகட்டத்தில் சிரியந்தூரில் பெருங்குழுவாகக் காடங்குளத்தில் இருந்து குடியேறிய காடங்குளம் வம்சத்தார் அனைவரும் காடன்குளத்தில் இருந்து வரும் பொழுதே கிறிஸ்தவர்களாகவே சிரியந்தூருக்கு வந்தார்கள். அருமநேரி வம்சம் என்றழைக்கப்படும் குடும்பத்தினர் சிரியந்தூரில் குடியேறியதும் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். இக்கிராமத்தில் குடியேறிய எவரும் தாங்கள் முன்பு வசித்த இடங்களில் இருந்து தாங்கள் முன்பு வழிபட்ட குலதெய்வங்களை இக்கிராமத்திற்குள் கொண்டு வந்து குலதெய்வ கோவில்களை நிறுவவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மகிழ்ச்சிபுரம் கிராம விரிவாக்கம்

சிரியந்தூர் மகிழ்ச்சிபுரம் கிராமம் உருவான காலகட்டத்தில் தற்போது TNDTA தொடக்கப்பள்ளி அமைந்துள்ள ஊரின் கிழக்கு பகுதியிலேயே மக்கள் குடியேறி வசித்துள்ளனர். மக்கள் தொகை பெருகப் பெருக அந்த இடத்தில் இட நெருக்கடி அதிகமானதால் ஊரின் மேற்கு பகுதியில் குடியேற தொடங்கினர். இவ்வாறு தங்களுடைய ஊரை படிப்படியாக மேற்கு நோக்கி விரிவாக்கம் செய்தனர்.

முதல் தேவாலயம்

மகிழ்ச்சிபுரம் கிராமத்தின் முதல் தேவாலயம் தற்போது TNDTA தொடக்கப்பள்ளி அமைந்துள்ள இடத்தின் முன்புறமுள்ள தெருவில் கிழக்கு நோக்கி பிரதான வாசல் கொண்டதாக இருந்துள்ளது. அதன் மேற்கூரை பனை ஓலைகளால் வேயப்பட்டதாக இருந்தது.

தொடக்கப்பள்ளி

சிரியந்தூர் மகிழ்ச்சிபுரத்தில் கிராமத்தார் அனைவரும் கிறிஸ்தவத்தை ஏற்று கிராமத்தார் வசித்த ஊரின் கிழக்கு பகுதியில் கிழக்கு நோக்கி வாசல் கொண்டதாக தற்போதைய பிரதான தெருவில் தேவாலயம் அமைத்த அதே காலகட்டத்தில் CMS மிஷனரிகளால் தொடக்கப்பள்ளியும் மகிழ்ச்சிபுரத்தில் நிறுவப்பட்டது

CMS சுத்தாங்க சுவிசேஷ சபையாக மாறுதல்

1924 இல் திருநெல்வேலி திருமண்டலத்தில் CMS மற்றும் SPG மிஷன் சபைகளை முழுமையாக ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கையை அப்போதைய நெல்லை பேராயர் மகாகனம். டப்ஸ் அவர்கள் நடைமுறைப்படுத்தியதால் திருநெல்வேலி திருமண்டல CMS சபைகளுக்குள் குறிப்பாக ஆழ்வாநேரி சர்க்கிளில் சர்க்கிள் சேர்மன் கனம். அருள்மாணிக்கம் ஐயரவர்கள் தலைமையில் முழுமையாக சபை பிளவு ஏற்பட்டது. ஆழ்வாநேரி சர்க்கிள் ஆழ்வாநேரி சேகரத்துக்கு உட்பட்டதாக மகிழ்ச்சிபுரம் திருச்சபை இருந்ததால் முழுமையாக CMS சுத்தாங்க சுவிசேஷ சபையை இந்த சபை சார்ந்து நின்றது. இந்த சபை பிளவு ஏற்படக் காரணமாக இருந்த சம்பவங்களையும் அதிலிருந்து மகிழ்ச்சிபுரம் திருச்சபை வெளியேறி மீண்டும் தாய் திருச்சபையாம் டயோசிசன் CMS இல் மகிழ்ச்சிபுரம் சபை இணைந்தது குறித்தும் சுருக்கமாகக் காண்போம்.

சடங்காச்சாரங்களை நடைமுறைப்படுத்த முயற்சித்தல்

ஆக்ஸ்போர்டு இயக்க சடங்காச்சாரங்களை மற்றும் சித்தாந்தங்களை CMS மற்றும் SPG மிஷன் சபைகளை ஒன்றுபடுத்துதல் எனும் அடிப்படையில் CMS சபைகளுக்குள் நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதே சபை பிளவுக்கு அடிப்படைக் காரணம். CMS மிஷனரி சங்கத்தின் அடிப்படை கோட்பாடு சடங்காச்சாரங்கள் இல்லாத சுத்த சுவிசேஷம் எனும் சுத்தாங்க சுவிசேஷம் ஆகும். ஆனால் SPG மிஷன் சடங்காச்சாரங்கள் கொண்டது. ஆதலால் எஸ். பி. ஜி மற்றும் சி. எம். எஸ். மிஷன் சபைகள் இணைப்பால் சுத்தாங்க சுவிசேஷம் எனும் CMS மிஷனின் அடிப்படைக் கோட்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு விடும் என்ற கவலை கொண்ட சி. எம். எஸ். சபை பெரியோர்கள், C M. S. சபை குருவானவர்கள் இந்த ஐக்கிய திட்டத்தை ஏற்கவில்லை. அந்நேரத்தில் சி. எம். எஸ் மிஷன் கோட்பாடுகளில் எவ்வித மாற்றமும் செய்யப்பட மாட்டாது என்ற வாக்குறுதிகள் CMS மிஷன் சபையாருக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் அவை உடனடியாகவே மீறப்பட்டது கோவில்பட்டி CMS தேவாலய ஆல்டர் திருமேஜையின் மீது சிலுவையும் விளக்குத் தண்டும் வைக்கப்பட்டது.

TDTA அமைப்பிற்குள் CMS மற்றும் SPG சபைகள்

07. 04. 1918 இல் நாசரேத்தில் திருநெல்வேலி அத்தியட்சாதீன நிர்வாக சபை கூடியது. அதில் CMS மற்றும் SPG ஆகிய இரு மிஷன் சபைகளுக்குமான சொத்துக்கள் Tirunelveli Diocesan Trust Association – TDTA என்ற பெயரிலான திருநெல்வேலி திருமண்டல அறக்கட்டளை சங்கத்திற்கு மாற்றப்பட்டது. இது 1919 முதல் நடைமுறைக்கு வந்தது.

தொடக்கத்தில் TDTA CMS மற்றும் TDTA SPG என்ற பெயர்களில் அவை அழைக்கப்பட்டாலும் பின்னர் TDTA என்ற பொதுப் பெயரில் திருநெல்வேலி திருமண்டல அறக்கட்டளை அமைப்பாக அழைக்கப்பட்டது.

சபைகளின் நிரந்தர இணைப்புக்கான டயோசிசன் கவுன்சில் கூட்டம் – 11. 03. 1924 (CMS மற்றும் SPG மிஷன்)

இருமுறை ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மூன்றாவது முறையாக குறிப்பிட்ட நாளில் 11. 03. 1924 அன்று பேராயர் மகாகனம் டப்ஸ் அவர்கள் காய்ச்சலோடு சுகவீனமான நிலையில் வந்திருந்து டயோசிசன் கவுன்சில் கூட்டத்தை நடத்தினார்கள். CMS மற்றும் SPG மிஷன் சபைகளின் நிரந்தர இணைப்புக்கான இந்த ஐக்கிய கூட்டத்தில் 100 குருவானவர்கள் 147 தேர்ந்தெடுக்கப்பட்ட சபை பிரதிநிதிகள் ஆக 247 பேர் மற்றும் 5 பார்வையாளர்கள் பங்கு பெற்றனர். பார்வையாளர்களில் ஒருவர் திரு M. D. தாமஸ் ஆவார் .

ஐக்கியத்திற்கு ஆதரவு

ஐக்கியத்திற்கு எதிர்ப்பு ஆகிய கருத்துகளை முன் வைக்கும்படி கூட்டத்தார் கேட்கப்பட்டனர் உறுப்பினர்கள் பேசுவதற்கு நேரம் அளவிடப்பட்டிருந்தது. நினைத்ததற்கு மாறாக கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் கோபமின்றி நிதானத்தோடு இந்த விஷயத்தில் வாக்குவாதம் செய்தார்கள் வாக்குவாதங்கள், தர்க்கங்கள் முடிந்தபின் பேராயர் எழுந்து இரு மிஷன் சபைகளின் நிரந்தர ஐக்கியத்திற்கு கூட்டத்தில் பங்கேற்றோரின் சம்மதத்தை தங்கள் கையை உயர்த்தி காட்டி தெரிவிக்குமாறு கேட்டார். மறுப்பு தெரிவிப்போர் தம் கரங்களை உயர்த்திட கேட்கப்பட்டபோது ஆழ்வாநேரி மற்றும் செவல் சர்க்கிளைச் சார்ந்த 5 பேர் மட்டும் மறுப்புக்கு ஆதரவாக தம் கைகளை உயர்த்தினர். பெரும்பான்மை ஆதரவு 242 / 247 என்ற அடிப்படையில் இரு மிஷன் சங்க சபைகளின் ஐக்கியத் தீர்மானம் நிறைவேறியதாக கூறிய பேராயர் அவர்கள் ஜெபித்து ஆசி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

பேராயர் மகாகனம். டப்ஸ் அவர்கள்

பேராயர் மகாகனம். நார்மன் டப்ஸ் அவர்கள் SPG சார்பு கல்கத்தா பிஷப்ஸ் கல்லூரியில் வேதாகமக் கல்வி பயின்றவர். சடங்காச்சாரங்களில் ஈடுபாடு கொண்டவர் ஆதலால் SPG மற்றும் CMS சபைகளின் ஐக்கிய கூட்டத்தை துப்பாக்கி சகிதமான காவல்துறை பாதுகாப்புடன் நடத்தியதாக என CMS சுத்தாங்க சுவிசேஷ சபையார் தமது வரலாற்று நூலில் குறிப்பிடுகின்றனர் ஆனால் 'காவல்துறை பாரா' இல்லாமல் ஐக்கிய கூட்டம் நடைபெற்றதாக ஐக்கிய கூட்ட பார்வையாளராக பங்கேற்ற திரு. M. D. தாமஸ் அவர்கள் குறிப்பிடுகிறார்.

குரு, மற்றும் உதவி குரு ராஜினமா

CMS சபைகளுக்கான ஆழ்வானேரி சர்க்கிள் சேர்மன் Rev. அருள் மாணிக்கம் ஐயரவர்களும் Rev. P. சாலமோன் பாக்கியநாதன் ஐயரவர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்றதை அறியமுடிகிறது. ஐக்கிய தீர்மானம் நிறைவேறியதால் தங்களுடைய குருவானவர் பொறுப்பை இருவரும் ராஜினாமா

செய்ததையும் அறிய முடிகிறது. இதுகுறித்து நெல்லை திருச்சபை 200 ஆண்டு சரித்திரம் நூலிலும், நெல்லை அத்தியட்சாதீன பொன்விழா சரித்திரம் நூலிலும் இவர்களது பெயர்கள் குறிப்பிடப்படவில்லை.

திருநெல்வேலி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை தொடக்கம்

கீழ்க்கண்ட ஆறு பெரியோர்கள் மூலம் 24. 05. 1924 அன்று இடையன்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு திருநெல்வேலி சி. எம். எஸ். சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை எனும் இந்த திருச்சபை நிறுவப்பட்டது அவர்களது பெயர்கள் பின்வருமாறு

கனம். அருள் மாணிக்கம் ஐயரவர்கள், கனம். T. வேதக்கண் ஐயரவர்கள், கனம். சாலமோன் பாக்கியநாதன் ஐயரவர்கள். ,தாசில்தார் மோசஸ் சீனிவாசகம் அவர்கள்,மாவட்ட விவாக ரிஜிஸ்ட்ரார் ஜான் V. சாமுவேல் அவர்கள்,சங்கை. சுவிசேஷகர். தாவீது ஐயா அவர்கள்.

CMS சுத்தாங்க சபையில் மகிழ்ச்சிபுரம் சபை இணைதல்

1906 முதல் 1909 வரை கனம். அருள்மாணிக்கம் ஐயரவர்கள் ஆழ்வாநேரி சர்க்கிளில் குருவானவர் ஆகப் பணி செய்திருந்ததால் ஆழ்வாநேரி சர்க்கிளில் உள்ள சபையார் மத்தியில் மகிழ்ச்சிபுரம் சபையார் மத்தியில் சிறந்த குருவானவர் என்ற நற்பெயரைப் பெற்றிருந்தார்கள். மகிழ்ச்சிபுரம் சபை ஆழ்வாநேரி சர்க்கிளில் ஆழ்வாநேரி சேகரத்துக்கு உட்பட்ட சபையாக மகிழ்ச்சிபுரம் இருந்ததோடு மட்டுமல்லாமல் ஆழ்வாநேரி கிராமத்தோடு அதிகமான திருமண உறவுகளைக் கொண்டிருந்தது. ஆழ்வாநேரி சர்க்கிளில் அவரது இரண்டாவது குருத்துவ பணிக்காலத்தில் (1923 முதல்) அவர் பணி செய்த போது தான் CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை பிளவு ஏற்பட்டது. அவருக்கு மகிழ்ச்சிபுரத்தில் சிறந்த மதிப்பு மரியாதை இருந்ததால் மகிழ்ச்சிபுரம் சபை முழுமையாக அவரது காலத்தில் CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையாக மாறியது.

இரு மிஷன் இணைப்பு முயற்சிக்கு கொடுத்த எதிர்ப்பு பத்திரம்

ஆழ்வானேரி சர்க்கிளுக்கு உட்பட்ட 4000 CMS அங்கத்தினர்கள் தங்கள் சார்பாக இரு மிஷன் சபைகளும் ஒரே ஐக்கிய நிர்வாகமாக நிரந்தரமாக இணைக்கப்பட்டால் பின்னர் தங்களை 1.Daughter Church சபையாக அங்கீகரிக்க வேண்டும்.2.பண அதிகாரத்தோடு சுயமாக செயல்பட அனுமதித்தல் வேண்டும்.3.திடப்படுத்தல் கொடுத்தல், தேவாலய பிரதிஷ்டை செய்தல், தாங்கள் தெரிந்து கொள்பவர்களுக்கு குரு அபிஷேகம் வழங்குதல், சபைக்கு புறம்பாக்குதல் போன்ற ஆன்மீக அதிகாரங்களை மட்டும் பேராயர் வைத்துக் கொள்ள வேண்டும். என்ற அம்சங்களுடன் கூடிய எழுத்துப்பூர்வ பத்திரத்தை 4,000 பேர் கையெழுத்திட்டு கொண்டு வந்திருந்தார்கள். இந்த கையெழுத்து ஆழ்வாநேரி சர்க்கிளுக்கு உட்பட்ட அனைத்து சபைகளிலும் வாங்கப்பட்டிருப்பதால் மகிழ்ச்சிபுரம் சபையாரும் இதில் கையெழுத்திட்டிருக்க வேண்டும்.

திருநெல்வேலி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை தரும் 1924 சபைக்கணக்கு

1924 இல் புதிதாக உருவான திருநெல்வேலி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் அந்த நாளில் 60 சபைகளும் அந்த சபைகளை சார்ந்த 10, 000 கிறிஸ்தவர்களும் இருந்தனர் எனக் குறிப்பிடுகின்றனர்.

திருநெல்வேலி CMS டயோசிசன் திருச்சபை தரும் 1924 ஆம் ஆண்டின் சபைக்கணக்கு

1925 டயோசிசன் கவுன்சில் அறிக்கைப்படி ஆழ்வாநேரி சர்க்கிள் முழுமையாக சுத்தாங்க சுவிசேச சபையைச் சார்ந்து இருந்துள்ளது. அவ்வாறு இருந்தபடியினால் 30 சர்க்கிள்கள் கொண்ட அக்காலத்து திருநெல்வேலி திருமண்டலத்தில் 1925 ஆண்டறிக்கையில் ஆழ்வாநேரி தவிர்த்து 29 சர்க்கிள்களின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது அக்காலத்தில் ஒவ்வொரு சர்க்கிளிலும் சுமார் நான்காயிரம் முதல் ஐந்தாயிரம் வரை சபை மக்கள் இருந்தனர். இடையன்குளத்தைத் தலைமை இடமாகக் கொண்ட செவல் சர்க்கிளில் அதன் சர்க்கிள் சேர்மன் K. T. அருமைநாயகம் ஐயரவர்கள் தங்களது செவல் சர்க்கிளில் 4, 300 சபை மக்கள் இருந்ததாகவும் அதில் தற்போது டயோசிசன் சி. எம். எஸ் திருச்சபையில் 2, 700 பேர் இருப்பதாகவும், CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் 1600 பேர் இருப்பதாகவும் குறிப்பிடுகிறார்கள் ஆதலால் டயோசிசன் திருச்சபை கணக்குப்படி ஆழ்வாநேரி மற்றும் செவல் சர்க்கிளில் சுமார் 6000 பேர் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் அக்காலத்தில் சேர்ந்துள்ளார்கள்.

கனம். G. T. செல்வின் ஐயரவர்களின் நியமனம்

ஆழ்வாநேரி, செவல் ஆகிய இரு சர்க்கிளுக்குள்ளும் திருநெல்வேலி டயோசிசன் ஐக்கிய ஏற்பாட்டை ஏற்றுக்கொண்ட சபையார் இருந்தனர். சென்னை பேராயரின் விசாரணை ஆளுகை தங்களுக்கு வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர் அதை சென்னை பேராயரும் ஏற்று தமது பிரதிநிதியாக பிற்காலத்தில் நெல்லை பேராயராக நியமிக்கப்பட்ட கனம். G. T. செல்வின் ஐயரவர்களை ஆழ்வாநேரி மற்றும் செவல் சர்க்கிள்களுக்கு உட்பட்ட சபைகளை கண்காணிக்கும் தமது பிரதிநிதி குருவாக அனுப்பி வைத்தார்கள். கனம். G. T. செல்வின் ஐயரவர்கள் அந்த இரு சர்க்கிள்களுக்கு உட்பட்ட குருவானவர்கள் மற்றும் சபை மக்களுக்கான காரியங்களை நன்கு கவனித்துக் கொண்டார்கள்.

கனம். G. T. செல்வின் ஐயரவர்களும் மகிழ்ச்சிபுரம் சபையும்

ஆழ்வாநேரி சர்க்கிளில் இருந்த மகிழ்ச்சிபுரம் சபையை இக்காலகட்டத்தில் கனம். G. T. செல்வின் ஐயரவர்கள் அதிக அளவில் நேசித்து பல முறை இக்கிராமத்திற்கு வந்து சபையாரிடம் பேசியதன் காரணமாக மகிழ்ச்சிபுரம் சபைமக்களிடம் ஓர் மாற்றம் ஏற்பட்டது அவர்கள் தாங்களனைவரும் மீண்டும் டயோசிசன் சபையில் சேர Rev. G. T. செல்வின் ஐயரவர்களிடம் விருப்பம் தெரிவித்தனர். சபையாரனைவரின் விருப்பத்தையும் ஏற்றுக் கொண்ட Rev. G. T. செல்வின் ஐயரவர்கள் மகிழ்ச்சிபுரம் சபையை திருநெல்வேலி டயோசிசன் சபையாக ஏற்றுக்கொண்டார்.

ஆழ்வாநேரி சர்க்கிளில் கிராமம் முழுவதுமாக சுத்தாங்க

திருச்சபையை விட்டு டயோசிசன் சபைக்குள் வந்த முதல் கிராமம் மகிழ்ச்சிபுரம். இந்த காலகட்டத்தில் தான் அவர் சிரியந்தூர் என இருந்த இக்கிராம பெயரை மகிழ்ச்சிபுரம் என மாற்றினார். மகிழ்ச்சிபுரத்தின் முதல் கிறிஸ்தவரான திரு. ப. ஞானமுத்து நாடார் அவர்களின் மகன் வேதக்கண் நாடார் அவர்கள் இல்லத்திற்கு அக்காலத்தில் அடிக்கடி கனம். G. T . செல்வின் துரை ஐயரவர்கள் வருகைதந்து வேத பாடம் நடத்துவார்கள் என்பதையும் வேதக்கண் வழி மரபினர் சபை வரலாற்று ஆய்வின் போது காண்பித்தார்கள். இன்றளவும் மகிழ்ச்சிபுரம் கிராமத்தார் அனைவரின் மனதிலும் கனம். G. T. செல்வின் துரை நிலைத்து நிற்கிறார்.

மகிழ்ச்சிபுரத்தில் ஆனந்த பண்டிகை தொடக்கம்

1925 இல் சி எம் எஸ் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையின் முக்கியமான மருதகுளம் உட்பட பல சபைகளில் தோத்திர பண்டிகைக்கு இணையான பண்டிகையாக ஆனந்த பண்டிகை தொடங்கப்பட்டது. 2025 இல் மருதகுளத்தில் நூற்றாண்டு ஆனந்த பண்டிகை நடைபெற்றது. மகிழ்ச்சி புரத்தில் அதற்கடுத்த 1926 ஆம் ஆண்டில் ஆனந்த பண்டிகை செப்டம்பர் முதல் வாரம் செவ்வாய் புதன் வியாழன் ஆகிய மூன்று நாட்களில் கொண்டாடப்படும் வகையில் தொடங்கப்பட்டது தற்போது செவ்வாய் முதல் ஞாயிறு வரை ஆறு நாட்கள் கொண்டாடப்படுகிறது.

கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலய திருவிழாவும் தூய ஸ்தேவான் ஆலய ஆனந்த பண்டிகை நடைபெறுகிற அதே செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் நடைபெறுகிறது. அக்காலத்தில் மகிழ்ச்சிபுரத்திற்கும் கீரன்குளத்திற்கும் இடையே அதிகமான திருமண தொடர்புகள் இருந்தது என்றும் கீரன்குளம் ஆனந்த பண்டிகையை பாதிக்காத வகையில் தொடக்க காலத்தில் செப்டம்பர் முதல் வாரம் ஆனந்த பண்டிகை என சபையாரால் நாட்கள் நிர்ணயிக்கப்பட்டது என இன்றளவும் சபையின் மூத்த பெரியவர்கள் விளக்குகின்றனர். இந்த ஆண்டு 2025 இல் நூற்றாண்டு ஆனந்த பண்டிகை சிரியந்தூர் மகிழ்ச்சிபுரத்தில் கொண்டாடப்படுகிறது.

புதிய தேவாலய கட்டுமானப் பணியும் பிரதிஷ்டையும்

மகிழ்ச்சிபுரம் கிராமம் உருவாகி சுமார் 50 ஆண்டு காலத்திற்குள் கிராமம் மேற்கு நோக்கி வேகமான வளர்ச்சியை பெற்றது முதலில் குடியேறிய கிழக்கு பகுதியில் இட நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக கிழக்குப் பகுதியில் இருந்து கிராமத்தின் மேற்கு பகுதியில் மக்கள் குடியேறினர் மேலும் மேற்கு பகுதியில் காலியிடங்கள் அதிகமாக இருந்தால் அந்த பகுதியிலேயே புதிய தேவாலயத்தை கிழக்கு நோக்கி பிரதான வாசல் கொண்டதாக சபையார் கட்ட தொடங்கினர். எந்த ஆண்டு கட்டத் தொடங்கினர் என்பது குறித்த விபரம் அறிந்து கொள்ள இயலவில்லை. 1942 இல் கட்டுமானப் பணி பொருளாளராக இந்த கிராமத்தில் முதன் முதலில் குடியேறிய ப. ஞானமுத்து அவர்களின் மகன் ஞா. வேதக்கண் அவர்கள் செயல்பட்டார்கள். தேவாலய கட்டுமான பணி நிறைவடைந்ததும் அப்போதைய நெல்லைப் பேராயரும் இக்கிராமத்தை அதிகமாக நேசித்தவருமான பேராயர் மகாகனம். G. T. செல்வின் அவர்களால் தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

மகிழ்ச்சிபுரத்தில் கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபை

மகிழ்ச்சிபுரம் கிராமத்தார் ஆதிக்க சமூகங்களின் ஆதிக்கத்தை எதிர்த்தே காடங்குளம் அருமநேரி போன்றவற்றிலிருந்து வெளியேறி சிரியந்தூர் மகிழ்ச்சிபுரத்தில் குடியேறி இருந்தனர் மகிழ்ச்சிபுரத்தில் மறவர் ஆதிக்கம் செலுத்த முனைந்த போது கிராமத்தார் ஒன்று பட்டு அதை வலிமையாக எதிர்த்தனர் அதில் பல முறைகள் சண்டைகள் ஏற்பட்டது. வழக்குகள் தொடுக்கப்பட்டன காவல்துறைக்கு கிராமத்தார் அலைந்து திரியும் சூழ்நிலை ஏற்பட்டது. தொடக்க காலத்தில் இக்கிராமத்தார் ஊர் அமைப்பில் பணம் பிரித்து இப்பிரச்சினைகளை சந்தித்தனர். தமது ஊர் மக்களுக்கு உதவி செய்து வந்தனர். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு சண்டைகளில் பங்கெடுத்த குடும்பத்தினரே காவல்துறை வழக்கு சார்ந்த காரியங்களில் பணம் செலவழிக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை இக்கிராம ஊர் கூட்டத்தில் எடுத்த போது இக்கிராமத்தைச் சார்ந்த 100 குடும்பங்களில் 40 குடும்பங்கள் அதை எதிர்த்தனர் அந்நேரம் அந்த 40 குடும்பங்களுக்கும் ஆதரவாக இக்கிராமத்தில் இருந்து சில கிலோமீட்டர் தொலைவில் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவ கிராமமான சிந்தாமணி பங்கு தந்தை மகிழ்ச்சிபுரத்திற்கு வருகை தந்து காவல்துறை சார்ந்த வழக்குகளுக்கு தாமே அவர்களுக்கு உதவி செய்வதாக வாக்குறுதி அளித்து உதவிகளும் செய்தார்கள் . ஆதலால் அந்த 40 குடும்பத்தினரும் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள். 1960 - 1965 களில் கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபை இங்கு உருவாயிற்று. 1966 இல் இங்கு கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆனால் கத்தோலிக்க கிறிஸ்தவ சபை இங்கு உருவான சில ஆண்டுகளில் 20 குடும்பத்தினர் கத்தோலிக்க கிறிஸ்தவ சபையில் இருந்து வெளியேறி மீண்டும் தாய் சபைக்குள் வந்தனர். தற்போது கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் 21 குடும்பத்தினர் உள்ளனர். CSI கிறிஸ்தவத்தில் 107 குடும்பத்தினர் உள்ளனர்.

திருச்சபையின் வளர்ச்சி - 1930 முதல் இன்று வரை

திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கை மற்றும் வருமானச் சுருக்கக் கணக்கின்படி மகிழ்ச்சிபுரம் திருச்சபையில் 1930 இல் 218 ஞானஸ்நானம் பெற்றவர்களும், 61 பரி. நற்கருணைக்காரர்களும் இருந்தனர். 1930 இல் 218 ஞானஸ்நானம் பெற்றவர்களும், 61 பரி. நற்கருணைக்காரர்களும் இருந்தனர். 1933 இல் 231 ஞானஸ்நானம் பெற்றவர்களும், 87 பரி. நற்கருணைக்காரர்களும் இருந்தனர்.

1941 இல் 270 ஞானஸ்நானம் பெற்றவர்களும், 85 பரி. நற்கருணைக்காரர்களும்இருந்தனர். 1951இல் 321ஞானஸ்நானம் பெற்றவர்களும், 144 பரி. நற்கருணைக்காரர்களும் இருந்தனர்.

1968 - 1969 இல் 280 ஞானஸ்நானம் பெற்றவர்களும், 130 பரி. நற்கருணைக்காரர்களும் இருந்தனர். 1979 - 1980 இல் 361 ஞானஸ்நானம் பெற்றவர்களும், 183 பரி. நற்கருணைக்காரர்களும் இருந்தனர். 2002 - 2003 இல் 172 ஞானஸ்நானம் பெற்றவர்களும், 123 பரி.

நற்கருணைக்காரர்களும் இருந்தனர்.

மகிழ்ச்சிபுரத்தில் இருந்து உருவான கிளை சபைகள்

1930 க்கு முன்பாகவே சில குடும்பத்தினர் மேல சிரியந்தூர் கிராமத்தில் கிறிஸ்தவத்தை ஏற்றிருந்தனர். 1932 வரை அவர்கள் சிரியந்தூர் எனும் மகிழ்ச்சிபுரம் திருச்சபைக்கே வந்து தேவாலய ஆராதனையில் பங்கு பெற்று வந்தனர். 1930 இல் மேல சிரியந்தூர் கிராமத்தில் மாபெரும் எழுப்புதல் உண்டாயிற்று. 75 பேர் கிறிஸ்தவத்தை ஏற்று ஞானஸ்நான ஆயத்தக்காரர் ஆனார்கள். 1933 ஆம் ஆண்டில் திருமண்டல ஆண்டறிக்கை வருமானத் சுருக்க கணக்கின்படி மேல சிரியந்தூர் சபையில் 82 ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்களும் 42 பரி. நற்கருணைக்காரரும் இருந்துள்ளனர். இதன் மூலம் மேல சிரியந்தூர் திருச்சபை மகிழ்ச்சிபுரம் சபையில் இருந்து பிரிந்து தனி சபையாக 1931 அல்லது 1932 இல் பிரிந்திருக்க வேண்டும் என அறிந்து கொள்ள முடிகிறது.

2024 க்கு முன்பாக மறவன்குளம் கிராமத்தில் கிறிஸ்தவத்தை ஏற்று பருவம் கடந்த ஞானஸ்நானம் பெற்ற குடும்பத்தார் மகிழ்ச்சிபுரம் சபை தேவாலயத்திற்கு வந்து கொண்டிருந்தனர். 2024 இல் மகிழ்ச்சிபுரத்தில் இருந்து பிரிந்து தனி சபையானது. அங்கு தேவாலயம் கட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

மகிழ்ச்சிபுரம் திருச்சபையின் சமீப கால வளர்ச்சி

சேகர தலைமை இடமாக மாறிய மகிழ்ச்சிபுரம் 2023 இல் மகிழ்ச்சிபுரம் புதிய தனி சேகரமாக உருவாக்கப்பட்டது. உடனடியாக குருமனை கட்டும் பணி மகிழ்ச்சிபுரத்தில் தொடங்கப்பட்டது. ஒரு ஆண்டிற்குள் சிறப்பாக கட்டப்பட்ட குருமனை 2024 இல் தூத்துக்குடி - நாசரேத் திருமண்டல நிர்வாகிகளால் புதிய குருமனை 09. 06. 2024 பிரதிஷ்டை செய்யப்பட்டது. புதிய இடம் தேவாலயத்திற்கு பின்புறம் இருந்த சுமார் இரண்டு ஏக்கர் நிலம் தேவாலய பயன்பாட்டிற்காக வாங்கப்பட்டுள்ளது.

மகிழ்ச்சிபுரமும் ஆராதனைகளும்

மகிழ்ச்சிபுரம் தேவாலயத்தில் அனுதினமும் அதிகாலை 5 மணியிலும் இரவு 7 மணியிலும் ஆராதனை நடைபெறுகிறது முதலாம் மற்றும் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒன்பது மணிக்கு திருவிருந்து ஆராதனை ஞாயிற்றுக்கிழமைகளில் ஓய்வு நாள் ஆராதனையும் தவறாக நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை உபவாச ஜெபம் மூன்றாவது சனிக்கிழமை முழுவதும் நடைபெறுகிறது. ஞாயிறு பள்ளி ஞாயிறு மதியம் 2:30 மணி அளவில் நடைபெறுகிறது ஆண்கள் பெண்கள் வாலிப ஆண்கள் பெண்கள் ஐக்கிய சங்க கூட்டங்கள் வாரந்தோறும் தவறாது நடைபெறுகிறது.

மகிழ்ச்சிபுரம் சேகரத்தில் மகிழ்ச்சிபுரம் மேல சிரியந்தூர் ஆகிய இரு சபைகள் உள்ளன. மகிழ்ச்சிபுரம் திருச்சபையில் தற்போது 449 ஞானஸ்தானம் பெற்றவர்களும், 335 பரி. நற்கருணைக்காரர்களும், 107 குடும்பத்தினரும் மகிழ்ச்சிபுரம் சபையில் உள்ளனர்.

கிறிஸ்தவ
வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

சந்தா விபரம்	உள்நாடு
தனிப்பிரதி	₹ 60 + நன்கொடை
ஆண்டு சந்தா	₹ 600 + நன்கொடை
ஐந்து ஆண்டு சந்தா	₹ 3000 + நன்கொடை

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL
A/c Number : 1748 020000 5614
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
(CHRISTAVA VARALATRU SUVADUGAL)
என்ற பெயரில் எடுக்கவும்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com

19-ஆம் நூற்றாண்டின் மத்தியில், பிரிட்டிஷ் இந்தியாவின் சமூக, மத மற்றும் கலாச்சாரக் கூறுகளை ஆவணப்படுத்துவதில் கிறிஸ்தவ மிஷனரி அமைப்புகள் முக்கியப் பங்காற்றின. அந்த வகையில், 'சர்ச் மிஷனரி' இதழின் 1852-ஆம் ஆண்டு வெளியான 'இந்தியாவின் பழங்குடி இனங்கள்' என்ற கட்டுரை, தென்னிந்தியாவின் நீலகிரி மலைப்பகுதியில் வசித்த தோடர் (Todas) பழங்குடியினரின் தனித்துவமான வாழ்க்கை முறை மற்றும் அவர்களின் மிக விரிவான இறுதிச் சடங்குகள் குறித்து ஒரு ஆழமான பார்வையை வழங்குகிறது. இந்தக் கட்டுரை, ஒரு மேற்கத்திய மிஷனரியின் பார்வையில் எழுதப்பட்டிருந்தாலும், தோடர் சமூகத்தின் நம்பிக்கைகள், சடங்குகள் மற்றும் சமூக கட்டமைப்பைப் பற்றிய ஒரு அரிய வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.

தோடர் மக்களின் வாழ்க்கை முறை மற்றும் நம்பிக்கைகள்

கட்டுரையாளர் தோடர்களை நீலகிரியின் மற்ற பழங்குடியினரான படகர்கள், குரும்பர்கள் ஆகியோரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறார். தோடர்கள் உடல் தோற்றத்தில் கம்பீரமானவர்கள் என்றும், அவர்களின் வாழ்க்கை முறை மேய்ச்சலை அடிப்படையாகக் கொண்டது என்றும் குறிப்பிடுகிறார்.

சமூக அமைப்பு: தோடர் சமூகத்தில், மதகுருவுக்கு நிகரான ஒரு தலைவர் இருக்கிறார். அவருக்கு 'டெர்-இர்-இ' (Têr-ir-i) என்று பெயர். இவர் சமூகத்தின் ஆன்மீகத் தேவைகளைக் கவனித்துக்கொள்கிறார். இவருக்கு உதவியாக 'காப்பிலி-ஆல்' (Câpil-aul) என்பவர் இருக்கிறார். இந்த டெர்-இர்-இ, பதவியேற்ற பிறகு திருமணம் செய்துகொள்ளும் வழக்கத்திலிருந்து விலகி, புனிதமானவராகக் கருதப்படுகிறார்.

மத நம்பிக்கைகள்: அவர்களின் நம்பிக்கைகள் இந்து மதத்தின் தாக்கத்தைக் கொண்டிருந்தாலும், அவை முற்றிலும் வேறுபட்டவை. அவர்கள் எருமைகளை மிகவும் புனிதமாகக் கருதுகின்றனர். அவர்களின் சடங்குகள் அனைத்தும் பால் மற்றும் பால் பொருட்களைச் சுற்றியே அமைந்துள்ளன. அவர்களின் வழிபாட்டிடம் 'பால்டி' (Pal-thli) என்று அழைக்கப்படுகிறது. அது ஒரு கூம்பு வடிவ குடிசையாகும்.

குடியிருப்புகள்: தோடர்களின் குடிசைகள், பாதி பீப்பாய் வடிவில், தரையிலிருந்து சுமார் பத்து அடி உயரம் கொண்டதாக இருக்கும். அவை வழக்கத்திற்கு மாறான அமைப்பைக் கொண்டவை என கட்டுரை விவரிக்கிறது.

இறுதிச் சடங்கு: ஒரு விரிவான பார்வை

கட்டுரையின் மிக முக்கியமான பகுதி, தோடர்களின் இறுதிச் சடங்கு (Obsequies) பற்றிய விரிவான பதிவாகும். இது 'கெர்' (Kêrr) என்று அழைக்கப்படும் அவர்களின் இடுகாட்டில் நடக்கும் ஒரு பெரிய சமூக நிகழ்வாகும்.

1. களமும் மக்களின் வருகையும்:

இறுதிச் சடங்கு, மலைகளால் சூழப்பட்ட ஒரு பரந்த பள்ளத்தாக்கில் நடத்தப்பட்டது. அங்கு தற்காலிகக் கூடாரங்கள்

மன்னா செல்வகுமார்

நீலகிரியின் பூர்வகுடிகள்: தோடர் மக்களின் வாழ்வும் இறுதிச் சடங்குகளும்

அமைக்கப்பட்டிருந்தன. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என நூற்றுக்கணக்கானோர் கூடினர். பதினான்கு அல்லது பதினைந்து அழகான இளைஞர்கள், கைகளில் கம்புகளுடன் நடனமாடியபடி கூட்டத்தை ஒழுங்குபடுத்தினர். இறந்தவரின் உறவினர்கள், குறிப்பாக பெண்கள், ஆழ்ந்த துக்கத்தில் இருந்தனர். அவர்கள் தரையில் அமர்ந்து, ஒருவரையொருவர் கட்டித்தழுவி, நெற்றிகளை முட்டிக்கொண்டு ஓங்கி அழுதனர். ஆண்கள் தங்கள் துக்கத்தை அமைதியாக வெளிப்படுத்தினர்.

2. ஊர்வலமும் புனிதப் பொருளும்:

சிறிது நேரத்திற்குப் பிறகு, துக்க ஊர்வலம் தொடங்கியது. இசைக் கருவிகளான குழல் மற்றும் தப்பட்டை முழங்க, மக்கள் வரிசையாகச் சென்றனர். ஊர்வலத்தின் மையமாக ஒரு புனிதப் பொருள் இருந்தது. அது, இறந்தவரின் மண்டை ஓட்டின் ஒரு பகுதி மற்றும் தலைமுடியின் ஒரு கற்றை ஆகியவை ஒரு துணியில் சுற்றப்பட்டு, ஒரு கூடையில் வைக்கப்பட்டிருந்தது. இந்தப் புனிதப் பொருளுக்கு மிகுந்த மரியாதை அளிக்கப்பட்டது. அதைச் சுமந்து வந்தவர், தரையில் விழுந்து வணங்கி, அதை ஒரு கல்லின் மீது வைத்தார்.

3. எருமைப் பலி: சடங்கின் உச்சம்:

இந்தச் சடங்கின் மிக முக்கிய மற்றும் உச்சகட்ட நிகழ்வு எருமைப் பலியாகும். பதினைந்து அல்லது பதினாறு பெரிய எருமைகள் அந்த இடத்திற்குக் கொண்டுவரப்பட்டன. வலிமையான இளைஞர்கள் கூட்டமாகச் சேர்ந்து, அந்த ஆக்ரோஷமான எருமைகளை அடக்க முயன்றனர். இது ஒரு கடுமையான போராட்டமாக இருந்தது.

இளைஞர்கள் எருமைகளின் கொம்புகளையும் வால்களையும் பிடித்து இழுத்தனர்; சிலர் அதன் கால்களைப் பிணைக்க முயன்றனர். இந்த நிகழ்வு ஒரு காட்டுத்தனமான நடனத்தைப் போல இருந்தது. இறுதியாக, ஒவ்வொரு எருமையையும் அடக்கி, அதன் கழுத்தில் ஒரு மணியைக் கட்டினர். பின்னர், ஒரு கோடரியின் பின்புறத்தால் அதன் தலையில் ஓங்கி அடித்தனர். அந்த அடியில் எருமை நிலைகுலைந்து விழுந்து இறந்தது. இந்தச் சடங்கு, இறந்தவரின் ஆன்மாவுடன் மறுமைக்குச் செல்ல எருமைகள் அனுப்பப்படுகின்றன என்ற நம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்பட்டது.

4. இறுதி மரியாதையும் தகனமும்:

பலியிடப்பட்ட எருமைகளின் இரத்தம், புனிதப் பொருளின் மீது தெளிக்கப்பட்டது. அதன் பிறகு, மீண்டும் ஒப்பாரி தொடங்கியது. 'ஹே ஹே ஷா! ஷா!' (Hey hey zha! zha!) என்று மக்கள் ஒரே குரலில் அழுது புலம்பினர்.

இறுதியாக, தகனம் செய்வதற்கான சிதை (Pyre) கட்டப்பட்டது. சந்தனக் கட்டைகள், பல்வேறு மூலிகைகள் மற்றும் நெய் ஆகியவை சிதையில் வைக்கப்பட்டன. இறந்தவரின் புனிதப் பொருளை சிதையின் மீது வைத்து, உறவினர்கள் கொண்டு வந்த அரிசி, தானியங்கள், வெல்லம் போன்ற பொருட்களையும் அதனுடன் சேர்த்தனர். பின்னர் சிதைக்குத் தீ மூட்டப்பட்டது. அது எரிந்து முடிந்ததும், சாம்பல் சேகரிக்கப்பட்டு, மிச்சமிருந்த எலும்புத் துண்டுகள் வட்ட வடிவில் அடுக்கப்பட்ட கற்களுக்குள் புதைக்கப்பட்டன. இந்தச் சடங்குகளைப் பார்த்த கட்டுரையாளர், 'இவர்கள் யாராக இருக்க முடியும்?' (Who can they be?) என்ற கேள்வியுடன் தனது வியப்பை முடிக்கிறார்.

மிஷனரிப் பார்வையும் எதிர்காலமும்

இந்தக் கட்டுரையை எழுதியவர், தோடர்களின் சடங்குகளை ஆச்சரியத்துடனும், அதே சமயம் ஒருவித அனுதாபத்துடனும் பார்க்கிறார். அவர்களின் நம்பிக்கைகளை 'விசித்திரமான மூடநம்பிக்கைகள்' (strange superstitions) என்றும், 'கடவுளை அறியாத இருள்' (darkness and in ignorance of God) என்றும் அவர் வர்ணிக்கிறார்.

இந்தச் சூழலில், நீலகிரியில் ஜெர்மன் மிஷனரிகள் ஆற்றிய பணியை அவர் குறிப்பிடுகிறார். குறிப்பாக, கெய்ட்டி (Kaity) என்ற இடத்தில் பணியாற்றிய மிஷனெரி ஜே.எம். ஷ்மிட்கல் (Rev. J. M. Schmidgall) என்பவரின் பணியை வெகுவாகப் பாராட்டுகிறார். ஷ்மிட்கல், தோடர்கள் உள்ளிட்ட நீலகிரி பழங்குடியினரிடையே கிறிஸ்தவ நற்செய்தியைப் பரப்புவதற்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர். அவர் ஒரு பள்ளியை நிறுவி, அங்கு தங்கியிருந்து, மாணவர்களின் கல்வியை தனிப்பட்ட முறையில் மேற்பார்வையிட்டார். தோடர்கள் போன்ற மக்கள், கிறிஸ்தவத்தின் மூலம் தங்களின் 'உயர் ஆன்மீக நிலையை' அடைய முடியும் என்று கட்டுரையாளர் நம்புகிறார்.

முடிவுரை

'சர்ச் மிஷனரியில் இடம்பெற்ற இந்தக் கட்டுரை, 19-ஆம் நூற்றாண்டு தோடர் சமூகத்தின் கலாச்சாரத்தையும், சடங்குகளையும் பதிவு செய்துள்ள ஒரு மதிப்புமிக்க மானுடவியல் ஆவணமாகும். ஒரு மிஷனரியின் பார்வையில் எழுதப்பட்டதால், இதில் சில பக்கச்சார்பான கருத்துக்கள் இருந்தாலும், அவர்களின் இறுதிச் சடங்குகள் குறித்த துல்லியமான, நேரடி வர்ணனைகள் தோடர் மக்களின் ஆன்மீக உலகத்தைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. மேலும், அக்காலகட்டத்தில் நீலகிரியில் நடைபெற்ற கிறிஸ்தவ மிஷனரிப் பணிகளின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்தும் இது ஒரு தெளிவான சித்திரத்தை அளிக்கிறது.

CHS -LIBRARY RESEARCH AND DEVELOPMENT CENTRE

"Remember the days of old; consider the years of many generations; ask your father, and he will show you, your elders, and they will tell you"

(Deut. 32:7 ESVA).

We, the People of God are exhorted to keep alive the memory of our faith history and pass it on to our sons and daughters. The Christian Historical Society endeavours to help Tamil-Christian community to fulfill this noble obligation.

All praise and glory be to God!

Shalom Greetings to you in the name of our Lord and Saviour Jesus Christ!

The Christian Historical Society (=CHS) is the fruit of the diligent efforts of numerous Tamil-Christian historians who in the light of Deuteronomy 32:7 seek to document as well as write the faith history of Tamil-Christian community with the active involvement of numerous young volunteers. To cover wider areas where our community has its roots, collaborations are underway with historians and like-minded individuals throughout Tamil Nadu.

By God's grace and with prayerful support of Friends, CHS has initiated several activities towards realising its objectives during the past five years since inception. The important ones being:

- *Publication of the monthly magazine, Kristhava Varalaatru Suvadugal*
- *Reprinting books which contain historical accounts of Tamil-Christian community*
- *Compilation and digitalising of antiquarian texts and documents*
- *Organising Mission Tours to places of historical importance*
- *Establishment of a Library with space for Museum, Research, Seminars etc.*

Currently, with the benevolent donation of land by a Friend, God has enabled CHS to start the building project for Library cum Research & Development Centre at Surandai. Few individuals are donating and have promised to donate portion of construction material. We need to buy remaining construction material and furnishings for the Library and Seminar Hall.

We cordially invite families, individuals and organisations to contribute generously to complete the momentous library building, God willing by Nov 2025.

In God's mission,

Manna Selvakumar
+91 9176780001

UPI ID: mannaselvakumar@okicici

“I AM GOING TO MY FATHER”

MUSULIPATAM

REV. J. E. SHARKEY

மன்னா செல்வகுமார்

'நான் என் தந்தையிடம் செல்கிறேன்': மசூலிப்பட்டினத்தில் ஒரு சிறுமியின் மரணமும் மிஷனரிப் போதனைகளின் தாக்கமும்

இந்தியாவின் மிஷனரி வரலாற்றில், மதமாற்றம் என்பது வெறும் எண்ணிக்கையாகப் பார்க்கப்படாமல், தனிநபர்களின் வாழ்வில் அது ஏற்படுத்திய ஆன்மிக மாற்றங்களின் சான்றுகளாகவே ஆவணப்படுத்தப்பட்டது. அத்தகைய ஒரு ஆழமான பதிவாக, மசூலிப்பட்டினத்தைச் சேர்ந்த Rev. J. E. Sharkey என்பவரின் கடிதம் அமைந்துள்ளது. டிசம்பர் 21, 1857 அன்று எழுதப்பட்ட இந்தக் கடிதம், ஆறு வயதே ஆன ஒரு கிறிஸ்தவ சிறுமியின் மரணத் தருவாயில் வெளிப்பட்ட உறுதியான விசுவாசத்தை விவரிக்கிறது. இது, மிஷனரிப் பள்ளிகளின் போதனைகள் குழந்தைகளின் மனதில் ஏற்படுத்திய தாக்கத்திற்கு ஒரு உருக்கமான சான்றாக முன்வைக்கப்படுகிறது.

சம்பவத்தின் பின்னணி

மசூலிப்பட்டினத்தில் பணியாற்றி வந்த மிஷனரி ரெவரெண்ட் J. E. ஷார்க்கி மற்றும் அவரது மனைவியின் அரவணைப்பில் பல குழந்தைகள் கல்வி கற்று வந்தனர். அவர்களில் ஒருவரான ஆறு வயது சிறுமி, நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் இருந்தாள். அவளது பெயர் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை. அந்தச் சிறுமியின் பெற்றோர், கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள். மிஷனரிப் பள்ளியில் கல்வி கற்ற அந்தச் சிறுமி, இறக்கும் தருணத்தில் வெளிப்படுத்திய வார்த்தைகளும், அவளது மன உறுதியும் ஷார்க்கியை வெகுவாகப் பாதித்தன. அந்த அனுபவத்தை அவர் தனது கடிதத்தில் பதிவு செய்துள்ளார்.

சிறுமி வெளிப்படுத்திய விசுவாசத்தின் தருணங்கள்

ரெவரெண்ட் ஷார்க்கியின் கடிதத்தின்படி, அந்தச் சிறுமியின் இறுதித் தருணங்கள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

1. தெய்வீக அழைப்பை உணர்தல்:

ஒருநாள் இரவு, ஷார்க்கியைச் சந்தித்த சிறுமி, 'ஐயா, நான் போகப் போகிறேன்; நான் என் தந்தையிடம் (பரலோகத் தந்தை) செல்கிறேன்' (Sir, I am going away; I am going to my Father) என்று கூறியுள்ளாள். அவளது துன்பங்கள் அதிகமாக இருந்தபோதும், அவள் எதிர்கொள்ளவிருக்கும் மரணத்தை அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொண்டாள்.

2. பெற்றோருக்கு அறிவுரை:

தன்னை பார்க்க வந்த தாயிடம், 'அம்மா, நீயும் என் தந்தையும் என் வழிகளைப் பின்பற்ற வேண்டும். இயேசுவைப் பற்றி எனக்குக் கற்றுக் கொடுங்கள், நான் அவரைப் போலவே இருக்க வேண்டும்' (Keep her with you and teach her as you have taught me. Do, Sir, tell my mother and father about Jesus; and I should like them to be happy also) என்று கேட்டுக்கொண்டாள். இது, தான் கற்றறிந்த ஆன்மிக உண்மைகளைத் தன் பெற்றோரும் பின்பற்ற வேண்டும் என்ற அவளது ஆழ்ந்த விருப்பத்தை வெளிப்படுத்தியது.

3. மரணத்தைப் பற்றிய தெளிவான புரிதல்:

'இறப்பது என்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா?' என்று ஷார்க்கி கேட்டபோது, அவள் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு, 'மகிழ்ச்சி' (happiness) என்று பதிலளித்தாள். அவளது நோய் அவளைப் பெரிதும் வாட்டியபோதும், மரணம் என்பது ஒரு துன்பகரமான முடிவல்ல, மாறாக பரலோகத்தில் அடையும்

மகிழ்ச்சியே என்ற நம்பிக்கையில் அவள் உறுதியாக இருந்தாள்.

4. இயேசுவின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை:

அவள் மிகுந்த வலியால் துடித்தபோது, 'இயேசு, இயேசு, என்னிடம் வாருங்கள்' ('Come unto me;' and before I could finish the word, she took up the words and completed the precious promise. The word for me in Telugu, is a difficult sanscrit word (vishranti)) என்று திரும்பத் திரும்பக் கூறினாள். மரணத்தின் நிழலிலும், 'நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்' ('Though I walk through the valley of the shadow of death I will fear no evil, for Thou art with me') என்ற சங்கீத வரிகளை நினைவுகூர்ந்தாள்.

மிஷனரிப் பார்வையில் இதன் முக்கியத்துவம்

ரெவரெண்ட் ஷார்க்கிக்கு, இந்தச் சிறுமியின் மரணம் வெறும் ஒரு சோக நிகழ்வாக மட்டும் தெரியவில்லை. மாறாக, அது அவர்களின் மிஷனரிப் பணியின் வெற்றிக்குக் கிடைத்த ஒரு தெய்வீக சான்றாக விளங்கியது. அவர் தனது கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

போதனைகளின் ஆழம்: தாங்கள் கற்பித்த கிறிஸ்தவ போதனைகள், ஒரு சிறு குழந்தையின் இதயத்தில் எவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதை இந்த நிகழ்வு நிரூபிப்பதாக அவர் கருதினார்.

விசுவாசத்தின் வெற்றி: கொடிய நோயின் பிடியிலும், மரணத்தின் வாசலிலும், ஒரு சிறுமியால் இவ்வளவு உறுதியான விசுவாசத்தை வெளிப்படுத்த முடிந்தது, அவர்களின் உழைப்பு வீண் போகவில்லை என்பதற்கான அத்தாட்சியாகும்.

பரலோகத்திற்கான அறுவடை: 'வருடந்தோறும் நமது குழந்தைகளின் இத்தகைய சாட்சியங்கள், நம் உழைப்பு வீண் போகவில்லை என்பதையும், நம் பள்ளிகள் பரலோகத்திற்கான நாற்றங்கால்களாக இருக்கின்றன என்பதையும் நிரூபிக்கின்றன' (While we feel that, for our many sins, are thus visited, year after year, we are content that the dying testimony of our children bids us go on with our work cheer-fully and patiently...) என்று அவர் எழுதுகிறார்.

முடிவுரை

இந்த ஆறு வயது சிறுமியின் கதை, மிஷனரி ஆவணங்களில் பதியப்பட்டுள்ள பல உருக்கமான கதைகளில் ஒன்றாகும். இது, கிறிஸ்தவ நம்பிக்கையானது அக்கால சமூகத்தில், குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே ஏற்படுத்திய தாக்கத்தை ஆழமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. வெறும் மதமாற்ற புள்ளிவிவரங்களுக்கு அப்பால், தனிநபர்களின் ஆன்மிக வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களே மிஷனரிப் பணியின் உண்மையான வெற்றி என்று அவர்கள் கருதியதற்கு இந்த நிகழ்வு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ரெவரெண்ட் ஷார்க்கியின் இந்தக் கடிதம், ஒரு சிறுமியின் மரணத்தை வெறும் துக்கமாகப் பார்க்காமல், ஒரு ஆன்மிக வெற்றியாகக் கொண்டாடிய மிஷனரி மனநிலையின் வரலாற்றுப் பதிவுமாகும்.

கிறிஸ்தவ
வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** (CHRISTAVA VARALATRU SUVADUGAL) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com

Yearly Subscription

600

christianhistoricalsociety.in

Apply Now

Monthly Magazine for church history

Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To

CHRISTAVA VARALATRU SUVADUGAL
2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401